
வார இதழ்


# தேசியம்

www.thesiyamnews.com

THESIYAM தේසියම්

WELLA HAIR DRESSING
WELLA வெலா சலூன்
Ladies & Gents
FACIAL | STRAIGHTING | BLEACHING | MASSAGING | THREADING | STEP CUT | LAYER CUT

No.08, Nallur New Market, Kalviyankadu, Jaffna.
Tel : 021 205 4116 | 077 684 6262 | 071 1000 023

மலர் - 02 | இதழ் - 23 | 20.06.2024 -27.06.2024 | வள்ளுவர் ஆண்டு 2054 | பக்கங்கள் 12 | ஊக்குவிப்பு : ரூ.80.00



# தேசியத் தலைவரை ஏற்று வெற்றி கண்ட சீமான்!

## தளபதி விஜயும் இதில் இணைவாரா?



**தேசியத் தலைவரை பின்பற்றும் சீமானும், ஈழத்து மருமகனான இளைய தளபதி விஜயும், தேசியத் தலைவரின் பெயரால் ஒன்றிணைந்து உலகத் தமிழர்களுக்கான அரசியலை முன்னெடுப்பார்கள் என்று பலரும் எதிர்பார்க்கின்றனர்.**

பக்கம் 10



பக்கம் 10

# வடக்கில் முகாமிட்டுச் சென்ற சிங்கள பேரினவாதக் கட்சிகள்!

சிறீலங்காவின்பிரதான தேசியக் கட்சிகளான ஐக்கிய தேசியக் கட்சி, ஐக்கிய மக்கள் சக்தி, மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி.) மற்றும் பொதுஜன பெரமுன ஆகியவற்றின் முக்கியஸ்தர்கள் சென்ற வாரத்தில் வடமாகாணத்தில் முகாமிட்டு அரசியல் சந்திப்புக்களை மேற்கொண்டிருந்தனர்.

சிறீலங்கா ஜனாதிபதித் தேர்தல் நெருங்கிவரும் நிலையில், தமிழர்களின் வாக்குகளை அபகரிப்பதற்காக வடமாகாணத்தை நோக்கி பிரதான கட்சிகளின் பிரதிநிதிகளும் முக்கியஸ்தர்களும் வந்தவண்ணம் உள்ளனர். சென்ற வாரத்தில் இந்த அனைத்துக் கட்சிகளின் பிரதிநிதிகளும் வடக்குக்கு வருகை தந்துள்ளனர்.



பக்கம் 09

# சூடுபிடிக்கும் தமிழ் பொதுவேட்பாளர் விடயம்

## களமிறங்கத் துடிக்கும் சிவாஜிலிங்கம்

# தமிழ்ப் பொதுவேட்பாளராக களமிறங்குவதற்குத் தயார்!



## அனந்தி சசிதரன் அறிவிப்பு!


பக்கம் 10

ஒரே நாளில் குறைந்த விலையில்
இந்தியாவிற்கான வீசா
மேலும் மலேசியா, தாய்லாந்து, சீனா போன்ற நாடுகளுக்கான சுற்றுலா வீசா ஏற்பாடுகள் செய்து கொடுக்கப்படும்.


ARUN WINGS
TRAVELS & TOURS
AIR TICKETS | VISA SERVICES | ETA VISA | HOLIDAY PACK
TRAVEL INSURANCE | TRAVEL ILTINERARY
ஒரு வருடத்திற்கான விசா | இலகு ஆவணங்கள் |
விரைவான சேவை | சகல நாடுகளுக்குமான மிகக்குறைந்த விலையில் விமானப்பயணச்சீட்டு

076 666 8680 | 076 847 2458
143,Temple Road, Jaffna. | E-Mail : arunwingslanka@gmail.com

தேசியம் THESIYAM
ஆசிரியர் பீடம்
தொலைபேசி : +94 76 567 3339
மின்னஞ்சல் : thesiyamnews@gmail.com
இணையம் : www.thesiyamnews.com



# பல்கலைக்கழக ஊழியர்களின் போராட்டத்தின் முடிவு!

பல்கலைக்கழக போதனைசாரா ஊழியர்களின் பணிப் பகிஷ்கரிப்புப் போராட்டம். மாதாந்த சம்பள மற்றும் கொடுப்பனவு அதிகரிப்பு கோரிக்கையை முன்வைத்து மே மாதம் 2ஆம் திகதி முதல் நடைபெற்று வருகிறது. தமது கோரிக்கைகள் நிறைவேற்றப்படும் வரை போராட்டம் தொடரும் என்ற நிலைப்பாட்டுடன் அவர்களது போராட்டம் 50 நாட்களை எட்டியிருக்கிறது.

அரசாங்கத்தின் அக்கறையின்மை காரணமாக மனிதாபிமான அடிப்படையிலான செய்பாடுகளைக்கூட நிறுத்துவது என பல்கலைக்கழக ஊழியர்கள் சங்கம் கடந்தவார இறுதியில் முடிவு செய்திருந்தது. இந்த நிலையில்தான் அரசாங்கத்தினது நகர்வுகள் எப்படியிருக்கும் என்று நாம் பார்க்க வேண்டும்.

கல்விசாரா ஊழியர்களது பணிப் புறக்கணிப்பினால் இலங்கையின் 17 பல்கலைக்கழகங்கள், பல்கலைக்கழக வளாகங்கள், மற்றும் பல்கலைக்கழகங்களுடன் இணைந்த நிறுவனங்களின் மாணவர்களது வாழ்க்கை கேள்விக்குறியாகியிருக்கிறது. சாதாரண குடும்பங்கள், வசதிபடைத்தவர்கள், அரச உயர்பதவிகளில் இருப்பவர்கள், அரசியல்வாதிகள், விரிவுரையாளர்கள், போராட்டத்தினை நடத்துபவர்களின் குடும்பங்களைச் சேர்ந்த 50ஆயிரத்துக்கும் மேற்பட்ட பிள்ளைகள் பாதிக்கப்பட்டுக்கொண்டிருக்கின்றனர்.

போராட்டத்தினால், வீணடிக்கப்படுவது கல்வி நடவடிக்கை மாத்திரமல்ல எதிர்கால சந்ததியினரின் வாழ்க்கையும், முன்னேற்றமும்தான் என்பதனை அனைவரும் மறந்து விடுகிறோம். இதற்குள் பரீட்சைகள், பரீட்சைப் பெறுபேறுகள், பட்டமளிப்புகள் என அனைத்தும் அடங்கும்.

அரசினால் இழுத்தடிப்புச் செய்யப்பட்டுவரும் சம்பள உயர்வானது உடனடியாக வழங்கவேண்டும் என்பதுதான் பல்கலைக்கழக நிருவாக உத்தியோகத்தர்கள், கல்விசார் உதவி உத்தியோகத்தர்கள் மற்றும் கல்விசார ஊழியர்களுடைய கோரிக்கையாக இருக்கிறது.

2016ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத்திட்டத்தில் அரச அலுவலர்களுக்கு 10000ரூபா கொடுப்பனவினை 5 கட்டங்களாக அதிகரிக்கப்பட்டது இதன்படி 107 வீத அதிகரிப்பு 2020இல் ஏற்பட்டது. ஆனால், பல்கலைகக்கழக பணியாளர்களுக்கு 92வீத அதிகரிப்பே மேற்கொள்ளப்பட்டது. இதனை 2016இன் ஆரம்பத்தில் வெளியிடப்பட்ட சுற்றறிக்கை தெளிவாக காட்டியிருந்தது. அதனைச் சீர்செய்ய வேண்டுமென்று பலமுறை பல்கலைக்கழக ஊழியர்கள் கோரியிருந்த போதிலும் அதனை அரசாங்கம் சீர்செய்ய வில்லை.

இருந்த போதிலும் 2019இன் ஆரம்பத்தில் அப்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் சம்பள முரண்பாட்டை சீர்செய்ய சம்பள நிர்ணய ஆணைக்குழு தோற்றுவிக்கப்பட்டது. இறுதியில் அவர்களுடைய ஆணைக்குழுவின் அறிக்கை வெளிவருவதற்கு முன்னதாகவே அரச பணியாளர்களுக்கு மாத்திரம் 2019ஆம் ஆண்டு யூலை மாத சம்பளத்திற்கு மேலதிகமாக இடைக்காலக் கொடுப்பனவாக 2500ரூபா வழங்கப்பட்டது.

அச் சம்பள அதிகரிப்பில் பல்கலைக்கழக ஊழியர்களுக்கு 15 வீதம் அடிப்படைச் சம்பள இழப்பு ஏற்படுத்தப்பட்டிருந்ததாக பல்கலைக்கழக ஊழியர்கள் தெரிவித்து வருகின்றனர். அத்தோடு இந்த இடைக்கால கொடுப்பனவும் பல்கலைக்கழக துறைக்கு வழங்க மறுக்கப்பட்டிருக்கிறது. சம்பள அதிகரிப்புத் தொடர்பில் மீண்டும் ஆணைக்குழு ஒன்றை நிறுவி இதன் மூலம் நிவாரணம் கிடைக்கும் என்பது சாத்தியமற்றதே என்பது பல்கலைக்கழக ஊழியர்களது கருத்தாக இருக்கிறது.

பல்கலைக்கழக போதனைசாரா ஊழியர்களை புறந்தள்ளி பல்கலைக்கழக செயற்பாடுகளை முன்னெடுக்க பல்கலைக்கழகங்கள் முனைவதும் நிகழ்வுகளை நடத்துவதும் சில முரண்பாடுகளை ஏற்படுத்தி வருகிறது.

பணிபகிஷ்கரிப்பு காரணமாக ஏற்படும் பிரச்சினைகளைத் தவிர்க்கும் வகையில் உயர்கல்வி அமைச்சு விரைந்து நடவடிக்கை எடுக்காத நிலைமை காரணமாக பல்வேறு பிரச்சினைகள் ஏற்பட்டுவருகின்றன.

கல்விசாரா உத்தியோகத்தர்களின் பலம் குறித்து அவர்கள் நன்கு உணரும் வகையில் சில நடவடிக்கைகளை எடுக்க வேண்டிய நிலைக்கு நாங்கள் தள்ளப்பட்டுள்ளோம் என கடந்த வெள்ளிக்கிழமை பல்கலைக்கழகங்களின் முன்பாக நடத்திய போராட்டம் ஒன்றின் போது ஊழியர் சங்கத்தினரால் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதே நேரத்தில் பகிஷ்கரிப்பையும் பொருட்படுத்தாதது மனிதாபிமான அடிப்படையில் நாங்கள் வழங்கிவந்த சேவைகளையும் நிறுத்தி, அனைத்து அத்தியாவசிய சேவைகளையும் முடக்கி சிலருக்கு பாடம் புகட்டவும் தயங்கமாட்டோம் என்றும் குறிப்பிட்டுள்ளனர். அதனை உறுதிசெய்துமுள்ளனர்.

பல்கலைக்கழகங்கள் என்றாலே போராட்டங்களுக்கு குறைவில்லாதது என்ற வரலாறுதான் ஆரம்ப காலங்கள் முதலே இருந்து வருகிறது. மாணவர்கள் ஆர்ப்பாட்டம் நடத்துவது, ஊழியர்கள் போராட்டம் நடத்துவது என்றவாறு ஏதோ ஒருவகையில் பல்கலைக்கழகங்களின் கல்வி நடவடிக்கைகளில் குழப்பங்கள் ஏற்படுவது வழமை. யுத்தகாலங்களில் நடைபெற்ற பல விடயங்கள் இந்த இடத்தில் மறக்கப்பட்டதாகவே இருக்கின்றன என்பது வேறு கதை.

அரசு ஊழியர்கள் என்பவர்கள் மக்கள் நலன் சார்ந்து செயற்படுபவர்கள் என்றுதான் பொருள். ஆனாலும் இந்த மக்கள் நலன் சார்ந்து செயற்படுகிறவர்கள் தங்களுடைய உரிமைகள் சார்ந்து போராட்டங்களை, தொழிற்சங்க நடவடிக்கைகளை முன்னெடுப்பதனால், அது மக்களுக்கும், எதிர்கால சந்ததியினருக்கும் பல பிரச்சினைகளைத் தோற்றுவிக்கிறது.

அனைத்து பல்கலைக்கழக தொழிற்சங்கங்களின் கூட்டுக்குழு ஆரம்பித்திருக்கின்ற தொழிற்சங்க நடவடிக்கை பல்வேறு பிரதிபலிப்புகளை ஏற்படுத்தியிருக்கிறது என்பது வெளிப்படையாகத் தெரிகின்ற உண்மை. தொழிற்சங்க நடவடிக்கை என்பது ஒரு கட்டுக்கடங்காத விடயமாக மாறி வருவதாகவே உணரமுடிகிறது. பல்கலைக்கழக போதனைசாரா ஊழியர்களின் வேலைநிறுத்த முன்னெடுப்பு என்பது ஒரு வெறுமனே ஒரு சம்பள முரண்பாடு சார்ந்த பிரச்சனையாக மாத்திரம் பார்த்துவிட முடியாது. வாழ்வாதாரத்துடனும் தொடர்புபட்டது.

தொழிற்சங்க நடவடிக்கைக்கு செல்லாமல் பேச்சுவார்த்தை ஊடாக பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்ள தொழிற் சங்கங்கள் முயற்சித்தாலும் பொறுப்புவாய்ந்த தரப்பினரின் கரிசினையின்மை இவ்வாறான நிலையை உருவாக்கியிருக்கிறது. இதற்கு பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்களும் விதிவிலக்கல்ல. கல்விசாரா ஊழியர்களுக்கு ஏற்பட்டுள்ள பிரச்சினைகள் தீர்த்து வைக்கப்படவேண்டியதே. ஆனால், தற்போது நடைபெறுகின்ற பல்கலைக்கழக ஊழியர்களின் போராட்டமே முதலாவது போராட்டம் என்ற வகையிலான கருத்துக்களும் பலரிடம் காணப்பட்டாலும், 2016ஆம் ஆண்டு முதலில் தொடங்கி வைக்கப்பட்ட இந்தப் போராட்டம் 2028, 2019, 2022, 2023 என முடிவின்றி தொடர்வதுதான் உண்மை.

எனவே முன்னெடுக்கப்பட்டு வரும் அனைத்து பல்கலைக்கழக ஊழியர்கள் போராட்டம் இவ்வருடத்திலேனும் நிறைவுக்கு வரவேண்டும் சம்பள விடயங்களுக்கான முரண்பாடுகள் களையப்படவேண்டும் இம்முறையேனும் தீர்வுடனோ ஒரு தீர்க்கமான பொருத்தப்பாட்டுடனோ முடிவுக்கு வரட்டும் என்று பிரார்த்திப்போம். இந்த இடத்தில்தான், பல்கலைக்கழக கட்டமைப்பில் ஏற்படும் பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்கும் பொறுப்பு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவையே சாரும் என்றவகையில், பல்கலைக்கழகங்களில் கடமையாற்றும் அனைத்து ஊழியர்களினதும் பொறுப்புவாய்ந்த அதிகாரியான பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தலைவர் செயற்பட வேண்டும். அதே நேரத்தில் துறைசார் அமைச்சரும், ஜனாதிபதியும் விரைந்து நடவடிக்கைக்கு வரவேண்டும் என்றும் கோரிக்கை விடுப்போம்.

இதே போல் அரசாங்கத்தின் பணியாளர்களாக இருக்கும் தொழில்துறையினரின் தொழிற்சங்க நடவடிக்கைகள் உருவாகாத நிலையை உருவாக்க அரசாங்கம் ஏற்படுத்தும் என்றும் நம்பிக்கொள்வோம்.

**ஆசிரியர்**

## தமிழர் போராட்டகால முன்னோடி மருத்துவர் ஜெயகுலராஜா காலமானார்!



தமிழர் விடுதலைப் போராட்டத்தின் ஆரம்ப கால முன்னோடிகளில் ஒருவரும் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் ஆரம்ப காலப் பொறுப்பாளருமான மருத்துவர் ஜெயகுலராஜா சுகயீனம் காரணமாக கடந்த ஞாயிற்றுக்கிழமை முல்லைத்தீவில் காலமானார்.

மருத்துவர், தமிழர் விடுதலைப் போராட்டத்தின் ஆரம்ப காலத்தில் சாவகச்சேரி பொலிஸ் நிலையத் தாக்குதலில் காயம்டைந்த சீலன், குமரப்பா, புலேந்திரன் போன்றவர்களுக்கு சிகிச்சையளித்தமைக்காக 1983 இல் கைது செய்யப்பட்டு, வெலிக்கடைச்சிறையில் குட்டிமணி, தங்கத்துரை. வண. பிதா சிங்கராசா மற்றும் விரிவுரையாளர் நித்தியானந்தன் போன்றவர்களுடன் இருந்தவர். பின்னர் மட்டக்களப்பு சிறையுடைப்பில் தப்பி இந்தியா சென்றிருந்தார். அதன் பின்னர் தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் தலைமைப் பொறுப்பை வகித்தவர். தேசத்தின் குரல் அன்ரன் பாலசிங்கம், அடேல் பாலசிங்கம், யோகி போன்றவர்களுடன் உடனிருந்து பணியாற்றியவர். மருத்துவர் ஜெயகுலராஜா விடுதலைப் புலிகளின் மருத்துவப் பிரிவுக்கு ஆரம்ப காலங்களில் பயிற்சியளித்ததோடு, முல்லைத்தீவு மாவட்ட மருத்துவப் பொறுப்பதிகாரியாகவும் பணியாற்றியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## தமிழர் தீர்வு தொடர்பில் மூவருடனும் விவாதம்!

### யாழ். வணிகர் கழகம் திட்டம்





ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் தமிழ் மக்களுக்கான தீர்வு தொடர்பிலும் 13ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பிலும் பிரதான ஜனாதிபதி வேட்பாளர்களை அழைத்து பகிரங்க விவாதம் நடத்தவுள்ளதாக யாழ்ப்பாண வணிகர் கழகம் தெரிவித்துள்ளது.

யாழ். வணிகர் கழகத்தின் தலைவர் இ.ஜெயசேகரன் இது தொடர்பில் தெரிவித்ததாவது:- அரசமைப்பிலுள்ள 13ஆவது திருத் தத்தை ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னரே நடைமுறைப்படுத்த முடியும். அது தொடர்பில் ஜனாதிபதி வேட்பாளர்களின் நிலைப்பாடுகளையும், தமிழர்களுக்கான தீர்வு தொடர்பில் அவர்களின் நிலைப்பாடுகளையும் அறியும் வகையில் ஜனாதிபதி வேட்பாளர்களை ஒரே மேடையில் ஏற்றி விவாதம் நடத்தவுள்ளேம். அதற்காக அரசியல் கட்சிகளுக்கு அழைப்பு அனுப்பவுள்ளோம் - என்றார்.

## பொதுவேட்பாளர் விவகாரம்!

### தமிழரசு தீர்மானிக்கவில்லை.



வரவிருக்கும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்ப் பொது வேட்பாளர் விவகாரம் குறித்து இலங்கை தமிழரசுக் கட்சி இன்னும் தீர்மானம் எதனையும் மேற்கொள்ளவில்லை என மாவை சோ.சேனாதிராஜா தெரிவித்தார். தெற்கின் பிரதான கட்சிகளின் தேர்தல் அறிக்கையைப் பார்வையிட்ட பின்னரே இது தொடர்பில் இறுதிமுடிவெடுக்கப்ப டும். சிலர் தமது தனிப்பட்ட கருத்துகளை வெளியிட்டாலும் அது எமது கட்சியின் உத்தியோகபூர்வ முடிவில்லை எனவும் மாவை மேலும் தெரிவித்தார்.



# ஈழத்து சைவர்களின் வாழ்வியலில் கதிர்காம கந்தனும் பாத யாத்திரையும்

கதிர்காம முருகன் ஆலயம். இலங்கை தீவின் தென்கிழக்கு கரையில் ஊவா மாகாணம் மொனராகலை மாவட்டத்தில் அமைந்துள்ளது.

இலங்கையில் அதிசயங்களில் ஒன்றாகிய கதிர்காம கந்தன் ஆலயத்திற்கு செல்கின்றவர்கள் அங்குள்ள கோயிலைக் காணலாம். நீரோடும் தீர்த்தமான மாணிக்க கங்கையையும் காணலாம். மூர்த்தியைக் காணமுடியாது. கதிர்காமத்தைக் கண்டேன். ஆனால் காணவில்லை" என்றே சொல்லவேண்டி வரும், மர்மரகசியம், மூடுமந்திரம், விளங்காத புதிர், விடை காண முடியாத பிரச்சனை என்று உள்ள வார்த்தைகளையெல்லாம் தொகுத்து "ஓம் சரவணபவ" எனும் ஓங்கார மந்திரத்தின் மர்மத்தின் உறைவிடமாக திகழ்கின்றது எங்கள் கதிர்காமம்.

கதிர்காமத்தை தமிழில் கதிர்காமம் என்று அழைத்தாலும் சிங்களத்தில் "கதிரகம" என்று சிங்கள மக்கள் அழைக்கின்றார்கள். கதிர்காமத்தில் தொன்மையும் பண்பாடும் ஈழத்து சைவர்களின் வரலாற்றோடும் வாழ்வியலோடும் அமிழ்திருக்கிறது. கதிர்காமம் என் பது கதிர் என்றால் ஒளி நிறைந்த இடம் காமம் என்றால் அன்பு நிறைந்த இடம் என்று தூய தமிழில் பொருள் கொண்டாலும் இலங்கையில் வாழும் தமிழ் இந்துக்கள் தங்களின் தனிப்பெரும் கடவுளாக கதிர்காமம் கந்தனை கருதி வழிபடுகின்றனர். தமிழ் மொழியை உலகுக்கு அளித்தவனென முருகன் போற்றப்படுகின்றான். தமிழர்களின் பழம்பெரும் வழிபாடாக வேல் வழிபாடு இருந்து வருகின்றது. முருகனின் மூல ஆயதமான வேலை, அவனாகவே கண்டு தொழுதலே, வேல் வழிபாடாகும். இன்று தமிழ்நாட்டில் அருகிவிட்ட அந்த தனிப்பெரும் வேல் வழிபாடானது இலங்கையின் பல இடங்களிலும் காணக்கிடைக்கின்றது. இலங்கை வாழ் தமிழர்களின் ஆன்மீகத்தில் முருகனுக்கே எப்போதும் முதன்மை இடமுண்டு.

கதிர்காமத்தில் வேல் வழிபாட்டை விடவும் இன்னனும் சூட்சுமமான முருக வழிபாடு வரலாற்றோடு தொடர்புபட்டு தொன்று தொட்டு நிலவி வருகின்றது. கதிர்காம முருகன் ஆலயத்தின் கருவறைக்குள்ளே அதி சக்தி வாய்ந்த சடாட்சர யந்திரம் இருப்பதாகவும், அது தமிழ்ச் சித்தர் மரபில் முதனிலையில் வைத்துப் போற்றப்படும் "போகரால்" உருவாக்கப்பட்டதெனவும் கூறப்படுகின்றது. கந்தபுராணத்திலுள்ள "ஏமகூட" படலத்தில் கதிர்காம சிறப்பு பற்றி சொல்லப்பட்டுள்ளமையும் அருணகிரிநாதரால் திருப்புகழ் பாடப்பெற்று இருப்பதும் கதிர்காம கந்தனின் மேல் உள்ள பக்திக்கு முக்கிய காரணங்களாகும்.

இலங்கை திரு நாட்டில் தமிழர்களும் சிங்களவர்களும் இஸ்லாமியர்களும் சென்று வழிபட்டு இன ஒற்றுமைக்கு எடுத்துக்காட்டாக விளங்கும் கதிர்காமமானது சிங்களவர்களின் தொன்மையான குடியேற்றங்களில் ஒன்றாக கதிர்காமத்தை பௌத்த வரலாற்றாய்வாளர்கள் அடையாளப்படுத்துகின்றனர். சிங்கள மொழி இலக்கியமான "ஸ்கந்த உபாத" என்னும் நூலில் தமிழ் அரசனான எல்லாளனை வெல்வதற்கு துட்டகைமுனு மன்னனுக்கு கதிர்காமக் கடவுள் அருள் செய்ததாக சொல்லப்படுகிறது.சிங்கள இலக்கியமான மகாவம்சமும் கதிர்காமத்தை சிறப்பித்துச் சொல்கிறது. ஆனாலும் தமிழ் அறிஞர்கள் திருமுருகாற்றுப்படை பேசும் ஐந்தாம் படைவீடு கதிர்காம மென்றே குறிப்பிடுகிறார்கள்.

**முருகப்பெருமானின் வழிதடத்தையொட்டி அகத்தியர், புலத்தியர் காசியப்ப முனிவர், கபில முனிவர்,போகர், பாபாஜி, கோரக்கர், அருணகிரிநாதர், யோகர் சுவாமி உட்பட பல சித்தர்களும் முனிவர்களும் ஞானிகளும் நடந்து வந்த பாதையில் எமது பாதங்களையும் பதித்து குமன, யால, கட்டகாமம் ஆகிய காடுகளை கடந்து ஆறு நாட்களாக பாதயாத்திரை சென்று கதிர்காம கந்தனை தரிசிக்கின்றனர்.**

15ஆம் நூற்றாண்டளவில் தமிழகத்தில் வாழ்ந்து, அருந்தமிழ்க் கவி செய்த அருணகிரிநாதர் தனது திருப்புகழில் "வனமுறை வேடர் அருளிய பூஜை மகிழ் கதிர்காமம் உடையோனே" என்று, கதிர்காமத்தில் வாழும் முருகனைச் சொல்கின்றார். வேடர்களால் வனத்தில் அவர்களின் வழிபாட்டு முறைகளின் படி நிகழ்த்தப்பட்ட பூஜைகளை ஏற்று மகிழ்ந்திருக்கின்றவன் முருகன் என்பது அதன் பொருள். இன்றைய கதிர்காமம் சில நூறு ஆண்டுகளுக்கு முன்னர் தான் நாகரிக மக்கள் வசம் வந்ததெனவும் அந்த வழிபாட்டுத் தலம் தோன்றிய காலப் பகுதியில் இருந்து வேடர்களாலேயே அது பரிபாலிக்கப்பட்டு வந்தது எனவும் கூறப்படுகின்றது.

இத்தகைய சிறப்பு வாய்ந்த கதிர்காமம் திருத்தலத்தின் ஆடிவேல் கொடியேற்ற திருவிழாக்காலங்களில் வடக்கு மாகாணம் யாழ்பாணம் செல்வச்சந்நிதி ஆலயத்திலிருந்து கதிர்காமம் நோக்கிய இலங்கையின் வெகு நீண்ட பாதயாத்திரையாக காட்டுவழியாக கதிர்காமத்தை வந்தடையும் அடியவர்களின் அனுபவங்கள் தனியாக எழுதப்பட வேண்டியவை. அந்த அளவுக்கு அவர்களிடம் மெய் கூச்செறியும் அற்புத அனுபவங்கள் உள்ளன. யாழ்ப்பாணத்தில் இருந்தும் திருகோணமலையில் இருந்தும் மட்டக்களப்பில் இருந்தும் அம்பாறையில் இருந்தும் கந்தனைக்காண பாதயாத்திரைக் குழுக்கள் கொடியேற்ற காலங்களில் பத்து நாட்கள் தொடர்ந்து வந்த வண்ணமே இருக்கும். பள்ளம், மேடு தாண்டி, கற்கள் முட்கள் கீறுண்டும் கூட கதிர்காம முருகனைத் தேடி, கால்நடையாக வரும் இந்த பக்தர்களின் பயணங்கள், காடுகளின் ஊடாகவே நடைபெறும். முருகனை மனதில் நினைந்து தோத்திரப் பாடல்களைப் பாடிய வண்ணம், அந்தப் பாத யாத்திரை அனைத்து இடர்களையும் தாண்டி தொடர்ந்து முன்னெடுக்கப்படுகின்றது.

1972ல் கந்தனை தொழும் பணியை அமெரிக்க பக்தரான பெட்ரிக் ஹரிகன் தலைமையில் வெருகல் முருகன் ஆலயத்தில் இருந்தும் வில்லூன்றி கந்த சுவாமி ஆலயத்தில் இருந்தும் ஆரம்பித்திருந்தார்.நாட்டில் ஏற்பட்ட யுத்த சூழ்நிலை காரணமாக சில காலம் தடைப்படிருந்தாலும் பின்னர் அது மீள ஆரம்பிக்கப்பட்டு முருகனை காணும் காட்டுவழி பாத யாத்திரை பயணம் தொடர்ச்சியாக தடையின்றி இடம்பெற்றுவருகின்றது. சுமார் 55நாட்களில் வடகிழக்கிலுள்ள 98 ஆலயங்களை தரிசித்து சுமார் 572 கிலோமீற்றர் வரை ஒரு நீண்ட பாத யாத்திரை பயணாமாக ஒவ்வொரு வருடமும் சுமார் 30 ஆயிரம் முதல் 40ஆயிரம் பக்தர்கள் உகந்தை மலை முருகன் ஆலயத்தின் ஊடாக காட்டு வழியாக இந்த பாதயாத்திரையை மேற்கொள்கின்றனர்.

உகந்தையிலிருந்து காட்டுக்குள்ளே குமண, குமுக்கன், தொலையாவெட்டை உப்பாறு, நாவலடி வியாளை, வள்ளி அம்மன் ஆற்று பாலம், கட்டகாமம், வீரச்சோலை வழியாக கதிர்காமத்தை அடைந்ததும் ஒவ்வொரு அடியவரின் வாழ்வின் வேண்டுதலும் இறையருளுடன் முழுமை பெறுகின்றது.

முருகப்பெருமானின் வழிதடத்தையொட்டி அகத்தியர், புலத்தியர், காசியப்ப முனிவர், கபில முனிவர், போகர், பாபாஜி, கோரக்கர், அருணகிரிநாதர், யோகர் சுவாமி உட்பட பல சித்தர்களும் முனிவர்களும் ஞானிகளும் நடந்து வந்த பாதையில் எமது பாதங்களையும் பதித்து குமன, யால, கட்டகாமம் ஆகிய காடுகளை கடந்து ஆறு நாட்களாக பாதயாத்திரை சென்று கதிர்காம கந்தனை தரிசிக்கின்றனர்.

மனதுக்கு அமைதி தரும் பயணமாகவும் பல்லாயிரம் பேர் வாழ்கையில் தெய்வீக மாற்றத்தை முருகப்பெருமானே நேரடியாக வந்து வழிநடத்தும் பயணமாகவும் காட்டு வழி பாத யாத்திரை பயணம் அமையும். 1000 வருட பாராம்பரியம் மிக்க இப்புனி பாத யாத்திரையானது ஆன்மீக பயணம் என்பதை தாண்டி வாழ்கையில் ஓர் புதிய பரிமாணத்திற்கே எம்மை கூட்டிச் செல்கின்றது. தீராத இன்னல்களையும் சொல்லொன்னா துயரங்களையும் பாரிய பிரச்சனைகயை/ம் வேண்டுதல் மூலம் தீர்க்கும் அற்புதமான பயணமாகும்.ஏழை பணக்காரன் உயர்ந்தோர் தாழ்ந்தோர் படித்தவன் படிக்காதவன் தொழிலாளி முதலாளி என்ற பேதமின்றி ஏரளமான புதிய நண்பர்களின் அறிமுகம் ஒன்றாக இருந்து உணவு உண்ணுதல் அனைவருக்கும் பகிர்ந்து உண்ணுதல் ஒருவொருக்கொருவர் உதவி செய்யும் மனப்பான்மை உடற்சகாதாரம் எளிமை ஒற்றுமை கூட்டுப் பிராத்தனை பஜனை வழிபாடு என பல நன்மை பயக்கும் விடயங்களை எமக்கு இந்த பாத யாத்திரை கொடுக்கின்றது.

இத்தகைய புனிதத்தன்மை மிக்க காட்டு வழி பாதயாத்திரை பயணமானது இம்முறையும் சகல பூர்வாங்க வேலைப்பாடுகளுடன் கதிர்காம உற்சவத்திற்கான பாதயாத்திரை ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில் எதிர்வரும் 30ம் திகதி காட்டுப்பாதை திறக்கப்பட்டு எதிர்வரும் மாதம் ஜூலை மாதம் 11ம் திகதி மூடப்படுமென அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் சிந்தக்க அபெவிக்கிரம தலைமையில் கடந்த 07ம் திகதி உகந்தையில் இடம்பெற்ற கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டிருந்தது. இந்நிலையில் கடந்த 12ம்திகதி கதிர்காமம் ஆலயத்தில் இடம் பெற்ற கூட்டத்தில் உகந்தை காட்டுப்பாதை திறக்கம் திகதி பிற்போடப்பட்டு எதிர்வரும் ஜூலை மாதம் 2ம் திகதி காட்டுப் பாதை திறக்கப்பட்டு ஜூலை மாதம் 14ம் திகதி. மூடப்படுவதுடன் கதிர்காம கொடியேற்றம் ஜூலை 6ம் திகதி இடம்பெறவுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளதாக திருக்கோவில் சேவற்கொடியோன் அமைப்பு தெரிவித்துள்ளது.

ஏற்கனவே 30ம் திகதி காட்டு பாதை திறப்பு என அறிவிக்கப்பட்டு அடியார்கள் பாத யாத்திரைக்கு தயாரான நிலையில் இரண்டு நாட்கள் பிற்போடப்பட்டு திகதி மாற்றம் செய்யப்பட்டுள்மை அடியார்கள் மத்தியில் குழப்பத்தையும் மன கவலையும் ஏற்படுத்தியுள்ளது. உகந்தைமலை முருகன் ஆலயத்திலிருந்து காட்டுவழி பாதை யாத்திரையானது மிக நீண்ட தூரம் என்பதால் பாத யாத்திரையில் வயதானவர்களும் நேர்த்திகடன் செலுத்த செல்லும் குழந்தைகளும் பெண்களும் நோயுற்றவர்களும் அதிகம் செல்வதால் குறுகிய கால மட்டுப்படுத்தப்பட்ட பாத திறப்பானது பல அசௌகரியங்களை ஏற்படுத்தும் என்பதே பக்தர்களின் வேண்டுகோளாகும் .

திகதி மாற்றம் தொடர்பில் ஆயிரக்கணக்கான பாத யாத்திரீகர்கள் சமூக அமைப்புக்கள் அனைத்து இந்து ஆலயங்கள் ஜனாதிபதி மற்றும் கிழக்கு மாகாண ஆளுனருக்கு மகஜர் மூலம் திகதி மாற்றம் தொடர்பில் தமது கண்டனத்தையும் அதிர்ப்தியையும் தெரிவித்து வருகின்றமை இங்கு குறிப்பிட தக்கதாகும்.

**செல்வி வினாயகமூர்த்தி**

# தமிழீழம் உருவாக வேண்டும்
## மோடியிடம் மதுரை ஆதீனம் கோரிக்கை!

ஈழத் தமிழ் மக்களுக்காக தமிழீழம் உருவாக வேண்டும் என மதுரை ஆதீனம் இந்தியப் பிரதமர் மோடியிடம் கோரிக்கை முன்வைத்துள்ளது.

நரேந்திர மோடி மீண்டும் பிரதமரானமை குறித்து மதுரை ஆதீனம் வெளியிட்டுள்ள கருத்தில், ”இலங்கையில் இலட்சக்கணக்கான மக்களைக் கொன்று குவித்தவர்களும் வெற்றி பெற்றுவிட்டார்களே என்ற வருத்தம் எனக்கு உள்ளது. அதன் காரணமாகத்தான் அவர்களுக்கு மத்தியில் ஆட்சி செய்ய முடியவில்லை.

அதேநேரம், மோடி ஈழத் தமிழர்களுக்கு வீடு கட்டிக் கொடுத்தார். மோடிக்கு முக்கிய கோரிக்கையை முன்வைக்கிறேன். ஈழத்தில் இருக்கும் மக்களை பாதுகாக்க தமிழீழம் உருவாக வேண்டும். மோடி பிரதமரானதில் எனக்கு மிக மகிழ்ச்சி.

சீமானின் வெற்றியால் விடுதலைப் புலிகளுக்கு அங்கீகாரம் கிடைத்துள்ளது. சீமான் என்னிடம் தனி நாடு வேண்டும் எனக் கோரிக்கை வைக்க வேண்டும் எனக் கூறினார். அதனைத் தான் நானும் கூறுகிறேன்.” எனவும் தெரிவித்துள்ளார்.

# புலம்பெயர்வதை விடுத்து, உங்கள் மண்ணில் அந்த பணத்தை முதலீடு செய்து
## உற்பத்திப் பொருளாதாரத்தை கையில் எடுங்கள்
### ஈழ மக்கள் ஐக்கிய முன்னணியின் தலைவர் தோழர் மதன்



நாங்கள் தோற்றுப் போயிருக்கலாம், உடைமைகள், விலைமதிக்க முடியாத இன்னுயிர்களை இழந்திருக்கலாம், நாட்டை இழந்து உறவைத் தொலைத்து புலம்பெயர்ந்திருக்கலாம், போராடி மண்ணின் மடியில் வீழ்ந்திருக்கலாம், ஆனாலும், நாங்கள் மறக்க முடியாத ஒன்று உண்டு. அதுதான் எம் உண்மை வரலாற்றின் சுவடுகள், முகவரியைத் தொலைக்காத, மறக்காத வாழ்வு என ஈழ மக்கள் ஐக்கிய முன்னணியின் தலைவர் தோழர் மதன் அவர்கள் தனது அறிக்கையொன்றில் குறிப்பிட்டுள்ளார்.

அவர் அந்த அறிக்கையில், எமது முன்னோர்கள் விட்டுச் சென்ற வரலாற்றின் வாழும் சாட்சிகள் நாம், போராட்டம் என்றால் என்ன? விடுதலையென்றால் என்ன? புவிசார் அரசியல் சுழற்சி, சிறை, போர்க்களம் என்னும் நெருப்பாற்றைக் கடந்த வரலாற்றுக்குச் சொந்தக்காரர், விடுதலைக்கு வித்திட்டவர்களில் எமது பங்கும் உண்டென்று நம்புபவர்கள் நாம். “ஆனாலும், உன் வரலாறு திரிவுபடுத்தப்படுவதை, மிகைப்படுத்தப்படுவதை, மலினப்படுத்தப்படுவதை விரும்பாத அதேவேளை, உண்மை வரலாற்றை விட்டுச் செல்லும் கடமை எமக்கானது என்று நம்புபவர்கள்” என்றும், இன்று தேசியம் என்னும் முகமூடியை அணிந்துள்ள பெரும்பாலானோர் போராட்டம் தீவிரமடைந்த காலத்தில் கொழும்பிலும், வெளிநாடுகளிலும், தொட்டிலிலும் கிடந்தவர்கள், இவர்கள் விடுதலைப் போராட்டத்தில் போரிட்ட போராளிகளுக்கு ஓர் தண்ணீர்க் குவளையைக் கூட வழங்காதவர்கள். இன்றோ உணர்ச்சியூட்டும் அரசியல் செய்பவர்களாக வலம்வருகின்றார்கள். எதிரியை விட இவர்களே மிகவும் ஆபத்தானவர். ஒட்டுமொத்த இனத்தையும் தமது சுயலாப அரசியலுக்காக அடகு வைக்கும் தரகர்களாக இருப்பவர்கள், இவர்கள் விடயத்தில் எமது மக்கள் மிகவும் விழிப்புடன் இருக்க வேண்டிய காலம் இதுவாகும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

பூர்வீகத்தை தொலைத்து புலம்பெயர்வது தான் எமது கனவு என்றால் “நாளைய உன் இனத்தின் தோல்வி” இன்றே உன்னால் எழுதப்படுகின்றது என்று நினைவில் நிறுத்திக் கொள். மாறிவரும் உலக ஒழுங்கு தீவிரமடையும் புலம்பெயர்ந்தவர்களுக்கான வன்முறைகளை உற்றுநோக்கும் பொழுது நடக்கவிருக்கும் ஆபத்தை கட்டியம் கூறி நிற்கின்றன. நீங்கள் பொருளாதார வாழ்வைத் தேடி ஓடுவது, வேர்களை அறுத்து மரங்களை வேறு இடத்தில் நடுவதற்கு சமமாகும். குறுகிய காலத்திற்கு பசுமையாக காட்சியளித்தாலும், நீண்ட காலத்திற்கு இந்த பசுமையானது நீடிக்கப் போவதில்லை.

என்றோ ஓர்நாள் இந்த உலக ஒழுங்கின் மாற்றம் உங்கள் அனைவரையும் பூர்வீகத்தை தேடி ஓடிவர வைக்கும். அன்று சொந்த மண்ணில் அகதியாக வாழ நேரிடும். வரலாற்று வாழ்விடங்களைத் விற்று, தொலைத்து, பெறப்படும் பெரும் தொகைப்பணத்தில் நீங்கள் புலம்பெயர்வதை விடுத்து, உங்கள் மண்ணில் அந்த பணத்தை முதலீடு செய்து உற்பத்திப் பொருளாதாரத்தை கையில் எடுங்கள் என்றே நாம் உங்களைத் தோழமையுடன் கேட்டு நிற்பதாகவும், ஓர் மாபெரும் திரட்சியானது எமது இனத்தை முன்னோக்கி நகர்த்தும். அது எமக்கானதாக மட்டும் இருந்துவிடப் போவதில்லை. தென்னிலங்கையில் எமக்கான நியாயங்களை, உரிமைகளை ஏற்றுக் கொள்ளும் சக்தியுடன், இணைந்த பலத்துடன், எமக்கான தனித்துவத்துடன் சிங்கள மக்களதும் நிலையான பிரித்தாள முடியாத, அந்நிய சக்திகள் கையாளாத, உறுதியான அரசியலை நிறுவி சமாதான சகவாழ்விற்கு நாம் எம்மால் முடிந்தவரை முன்நகர்த்தி, அடுத்த சந்ததியினரின் கைகளில் கொடுத்து விட்டுச் செல்லத் திடசங்கற்பம் பூண்டுள்ளதாகவும் ஈழ மக்கள் ஐக்கிய முன்னணியின் தலைவர் மதன் அவர்கள் அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# தமிழர்களுடைய பிரச்சினைக்கு 13ஆவது திருத்தச் சட்டம் தீர்வல்ல!
## சஜித்திடம் விக்னேஸ்வரன் எடுத்துரைப்பு.




தமிழ் மக்களின் பிரச்சினைக்கு 13ஆம் திருத்தச் சட்டம் இறுதித் தீர்வல்ல. தற்போதுள்ள 13ஆம் திருத்தச் சட்டத்தில் பல குறைபாடுகள் உள்ளன. ஒற்றையாட்சி முறைமை கொண்ட அரசமைப்பை ஏற்பதற்கு தமிழ்மக்கள் தயாராக இல்லை - இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவிடம், க.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இதன்போது, 13ஆம் திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவேன் என்று வாக்குறுதி அளித்தார் எதிர்க்கட்சித் தலைவர். அவருக்கு பதிலளித்த விக்னேஸ்வரன் எம். பி 13ஆம் திருத்தச் சட்டம் தமிழ் மக்களின் பிரச்சினைக்கு இறுதியான தீர்வு அல்ல. அது 1987இல் இலங்கை - இந்திய ஒப்பந்தம் மூலம் ஏற்படுத்தப்பட்ட சட்டம். இதில், வழங்கப்பட்ட அதிகாரங்கள், உரிமைகள் பலவற்றை மத்திய அரசாங்கம் எடுத்துக் கொண்டுவிட்டது.

தற்போதுள்ள 13ஆம் திருத்தச் சட்டத்தில் உள்ள பல அதிகாரங்களை மத்தி எடுத்துக் கொண்டது. 1992ஆம் 58ஆம் இலக்க சட்டத்தின் மூலம் மாகாணத்தின் கீழிருந்த அரச அதிபர், பிரதேச செயலர்கள், கிராம சேவகர்களை மத்திய அரசாங்கம் தனது கட்டுப் பாட்டுக்குள் கொண்டு வந்தது. எனவே, தற்போதுள்ள 13ஆம் திருத்தம் தமிழ் மக்களுக்கு தீர்வல்ல. ஒற்றையாட்சி அரசமைப்பை நாங்கள் ஏற்கமுடியாது. தமிழ் மக்களின் அபிலாசைகளை நிறைவேற்றக்கூடிய தீர்வே எமக்கு தேவை என்று தான் சஜித் பிரேமதாஸவிடம் கூறினார் என்று விக்னேஸ்வரன் எம். பி. தெரிவித்தார்.

# இலங்கை தமிழர்களே உலகம் முழுவதும் தமிழ் மொழியை கொண்டு சென்றனர்!
## முன்னாள் இந்திய துணைத்தூதர் நடராஜன்



உலகம் முழுவதும் தமிழ் மொழியை கொண்டு சென்றவர்கள் இலங்கை தமிழர்களே என முன்னாள் இந்திய துணை தூதர் நடராஜன் தெரிவித்துள்ளார்.

கடந்த வாரம் கிழக்கு பல்கலைக்கழகத் தில் நடைபெற்ற சர்வதேச ஆய்வு மாநாட்டில் கலந்து கொண்டு பேசிய போதே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். மேலும் தெரிவிக்கையில், “இந்தியா இலங்கைக்கு பெரியண்ணன் என்று கூறுவார்கள் ஆனால் இந்தியா இலங்கைக்கு பெரியண்ணன் அல்ல இந்தியாவும் இலங்கையும் இரட்டைச் சகோதரர்கள் என்று தான் கூற வேண்டும். சமீபத்தில் இந்தியப் பிரதமராக நரேந்திர மோடி பதவி ஏற்கும் நிகழ்விற்கு இலங்கை ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க வந்திருந்தார்.


தற்போது இந்தியாவின் வெளியுறவுக் கொள்கையாக பக்கத்து நாடுகளுடனான உறவே முக்கியமாக இருக்கிறது. பத்து நாடுகளில் நான் பணி புரிந்த அனுபவங்களை புத்தகமாக எழுதி அதை மட்டக்களப்பில் வெளியிட்டுள்ளேன். இந்த புத்தகத்தில் இலங்கையில் நான் பணியாற்றிய அனுபவங்களையும், போர் காலத்தில் மக்கள் எவ்வளவு அவதிப்பட்டனர், போர்க்களத்தில் நடந்த பல வெளிவராத சம்பவங்களையும் பதிவு செய்துள்ளேன். அத்துடன் கிழக்கு மாகாணம் தொடர்பாக சிறு குறிப்பும் எழுதியுள்ளேன்” எனவும் குறிப்பிட்டுள்ளார்.

# அதிகாரப் பகிர்வில் தெளிவான முடிவெடுப்பது ஜனாதிபதியின் பொறுப்பு: பிள்ளையான்



தமிழர்களைப் பொறுத்தவரை அதிகாரப் பகிர்வு விடயத்தில் ஒரு தெளிவான முடிவை எடுக்க வேண்டிய பொறுப்பு ஜனாதிபதிக்கு இருக்கின்றது என தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியின் தலைவர் சிவனேசத்துரை சந்திரகாந்தன் தெரிவித்துள்ளார். மட்டக்களப்பில் இடம்பெற்ற புனரமைக்கப்பட்ட வீதியை மக்கள் பாவனைக்கு கையளிக்கும் நிகழ்வில் கலந்துகொண்டு கருத்து தெரவிக்கையிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில், ”இந்த தேர்தலில் ரணில் விக்ரமசிங்க போட்டியிடுவதாக தெரிவிக்கப்பட்டிருக்கின்றது. ஒரு சிக்கலான காலகட்டத்தில் நாட்டை சரியான இடத்திற்கு செலுத்த முயற்சி எடுத்து வெற்றி பெற்றிருக்கும் அவரின் அறிவும் அனுபவமுமே நாட்டை இந்த இடத்திற்கு கொண்டு வந்திருக்கின்றது. ஜனாதிபதி தமிழ்க் கட்சிகளை அணுகுகின்ற விடயங்கள் வெளிநாட்டு தூதரகங்களோடு இடம்பெறுகின்ற விடயங்கள் அனைத்தையும் கொண்டுபார்க்கின்ற போது ஜனாதிபதி சாதகமான ஒரு கொடியினை காட்டி இருக்கின்றார்” எனக் குறிப்பிட்டுள்ளார்.



கந்தையா அருந்தவபாலன்



# இலங்கையின் ஜனாதிபதித் தேர்தலும் ஈழத்தமிழ் மக்களும்



இலங்கைக் குடியரசுக்கான இரண்டாவது அரசியலமைப்பில்(1978) அறிமுகப்படுத்தப்பட்ட நிறைவேற்றதிகார ஜனாதிபதி பதவிக்கு இதுவரை எட்டுத் தேர்தல்கள் நடைபெற்றிருக்கின்றன. இந்த எட்டுத்தேர்தல்களில் ஆறு பேர் மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதிகளாக பதவி வகித்துள்ளனர். இவர்களுள் சந்திரிகா பண்டாரநாயக்கவும் மஹிந்த ராஜபக்ஷவும் இரு தடவைகள் ஜனாதிபதியாக மக்களால் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். அதேவேளை இருவர் மக்களால் தெரிவு செய்யப்படாது நாடாளுமன்ற அங்கீகாரத்துடன் நிறைவேற்று ஜனாதிபதிகளாகப் பதவி வகித்துள்ளனர்.

1989 இல் மக்களால் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்ட ரணசிங்க பிரேமதாச 1993இல் படுகொலை செய்யப்பட அவரது எஞ்சிய பதவிக்காலத்துக்கு டிங்கிரி பண்டா ஜெயதுங்கவும் 2019 இல் மக்களால் தெரிவு செய்யப்பட்ட கோதாபய ராஜபக்க்ஷ 2022 இல் நாட்டைவிட்டு தப்பியோடி தனது பதவியைத் துறக்க தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவும் நாடாளுமன்றத்தினால் தெரிவு செய்யப்பட்டனர். இலங்கைக் குடியரசு அரசியலமைப்புக்களை தமிழர்கள் விரும்பி ஏற்றுக்கொள்ளாவிடினும் ஒரேயொரு சந்தர்ப்பத்தைத்தவிர ஏனைய ஏழு தேர்தல்களிலும் தமிழ் மக்கள் வாக்களித்தே வந்துள்ளனர். 2005 இல் விடுதலைப் புலிகளின் அறிவுறுத்தலுக்கமைய வடக்கு கிழக்கில் தமிழ்மக்கள் பெரும்பான்மையாக தேர்தலைப் புறக்கணித்திருந்தனர். அதன்பின்னரான மூன்று தேர்தல்களிலும் தமக்கான ஜனாதிபதியைத் தெரிவு செய்வதற்காக அல்லாமல் தமிழ் இனப்படுகொலையாளர்களான ராஜபக்ஷக்கள் தோற்கவேண்டும் என்பதற்காகவே தமிழ் மக்கள் வாக்களித்திருந்தனர்.
2010இல் சரத் பொன்சேகவுக்கும் 2015இல் மைத்திரிபால சிரிசேனவுக்கும் 2019இல் சஜித் பிரேமதாசவுக்கும் பெரும்பாலான தமிழ் மக்கள் வாக்களித்தனர். இவர்களுள் மைத்திரி மட்டுமே ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டிருந்தார். இவ் வகையில் ஈழத் தமிழர்கள் இலங்கையின் ஜனாதிபதித் தேர்தலில் புறக்கணித்தல், தென்னிலங்கை வேட்பாளர்களுக்கு வாக்களித்தல் வென்ற இரு தெரிவுகளைக் கையாண்டு வந்துள்ளதைக் காணலாம். ஆனால் எதிர்வரும் ஜனாதித் தேர்தலில் இவற்றுடன் இன்று இனனொரு தெரிவாகத் தமிழ் பொது வேட்பாளருக்கு வாக்களித்தல் என்பது குடிசார் பொதுக் கட்டமைப்பால் முன்னிலைப்படுத்தப்பட்டு வருகிறது.

இவ்வகையில் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாக தமிழ் மக்களின் முன் மூன்று தெரிவுகள் காணப்படுகின்றன. இத் தெரிவுகள் தொடர்பாக ஆராய்வதன் மூலம் இவற்றுள் இன்றைய களநிலைமைகளில் எது தமிழ் மக்களுக்குக் கூடிய பயன்தரும் எனத் தீர்மானிக்க முடியும்.

தேர்தல் ஒன்றில் வாக்களிப்பதனூடாக மக்கள் தமது விருப்பத்தை வெளிப்படுத்துவது போலவே அவர்கள் ஒட்டுமொத்தமாக வாக்களிக்களிக்காது விடுவதன் மூலமும் தங்கள் கருத்தை வெளிப்படுத்துவது ஜனநாயகரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்றாகும். எனினும் வாக்களிக்காது இருப்பதை மேற்குலக நாடுகள் பொதுவாக விரும்புவதில்லை. 2005இல் விடுதலைப் புலிகள் தேர்தலைப் புறக்கணிக்குமாறு வலியுறுத்தியமை மேற்குலக நாடுகளுக்கு உவப்பானதாக இருக்கவில்லை என்பதுடன் விடுதலைப் புலிகள் மீதான அதிருப்தியையும் ஏற்படுத்தியிருந்தது. அதற்குக் காரணம் அது மக்களின் ஜனநாயக உரிமையைத் தடுத்தது என்பதைவிடத் தமக்குச் சார்பான ரணிலின் வெற்றியைத் தடுத்துவிட்டது என்பதாகும்.

தேர்தலைப் புறக்கணித்தது தவறு என்றும் அதனால்தான் முள்ளிவாய்க்கால் பேரவலம் ஏற்பட்டது என்றும் ஒரு தரப்பால் இன்றுவரை விமர்சனம் செய்யப்பட்டு வருகிறது. அதன் அண்மைய வெளிப்பாடுதான் யாழ்ப்பாணத்தில் ரணில் கலந்து கொண்ட கூட்டமொன்றில் அத்தேர்தலைப் புறக்கணித்ததற்காகத் தமிழ்மக்கள் வருந்துவார்கள் எனச் சுமந்திரன் கூறியது. தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டம் தொடர்பாக எவ்வித பட்டறிவும் இல்லாது கொழும்பில் சிங்களத் தலைவர்களுடன் கூடிக்குலாவிச் சொகுசு வாழ்க்கை நடத்திய சுமந்திரன் விடுதலைப் புலிகளால் கட்டமைக்கப்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் பின்கதவால் நுழைந்து அவர்களையே விமர்சனம் செய்வதற்கும் ஒட்டுமொத்தத் தமிழ்மக்களின் சார்பில் கருத்துக் கூறுவதற்கும் என்ன தார்மீக உரிமை இருக்கிறது என்று தமிழ்மக்கள் தரப்பில் எழும் கேள்வி நியாயமானதாகும். இவர்களைப்போல விடுதலைப் புலிகள் வாய்ச்சொல் வீரர்களாக இருந்தவர்கள் அல்லர். அன்றைய களநிலைமை, நோக்கம், இலக்கு, பலம் என்பற்றினடிப்படையில் அவர்களால் எடுக்கப்பட்ட முடிவு அது.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலைத் தமிழ் மக்கள் புறக்கணிக்கவேண்டும் என்று வழமைபோலத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி கோரிக்கை விடுத்துள்ளதுடன் அது தொடர்பாகப் பரப்புரைகளிலும் ஈடுபட்டு வருகிறது. இக்கட்சியினரைத் தவிர வேறு தரப்புகள் எவையும் புறக்கணிப்புக்கு ஆதரவு தெரிவித்ததாக இதுவரை செய்திகளில்லை. தேர்தல் புறக்கணிப்பின் பின்னால் நியாயமான பல காரணங்கள் உள்ளன. இலங்கையின் ஜனாதிபதித் தேர்தல் தமிழர்க்கானது அல்ல. அதில் பங்கெடுப்பது தமிழ்மக்கள் தமக்கான குழியை தாமே வெட்டுவது போன்றது. தெரிவு செய்யப்படும் ஜனாதிபதிகள் எல்லோரும் பௌத்த சிங்கள பேரினவாத அடிப்படையில் தமிழ் இனத்துக்கு எதிரான செயற்பாடுகளையே தொடர்ந்து செய்து வருகின்றனர். செய்யவும் போகின்றனர். தேர்தலில் பங்கெடுப்பதன் மூலம் அவர்களின் இத்தகைய இனவாதச் செயற்பாடுகளுக்கு இலங்கையர் என்ற அடிப்படையில் தமிழர்களும் அங்கீகாரம் வழங்குவதாகவே அமையும்.

தமக்கான அரசியல் உரிமைகள் கிடைக்கும் வரையில் இலங்கையின் ஜனாதிபதி தமக்கான ஜனாதிபதியல்லர் என்பதைத் தமிழ் மக்கள் இப்புறக்கணிப்பின் மூலம் வெளிப்படுத்த விரும்புகின்றனர் என்பவையே இதன் பின்னால் உள்ள நியாயங்கள் ஆகும்.

அடுத்தது ஜனாதிபதித் தேர்தலில் தென்னிலங்கை வேட்பாளர் ஒருவருக்கு வாக்களிப்பது என்ற வழமையான தெரிவு. இத்தேர்தலில் வெற்றிபெறக்கூடும் எனக்கருதும் தென்னிலங்கை வேட்பாளர் ஒருவருக்கு வாக்களிப்பதன் மூலம் தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணமுடியும் என்பது இத்தெரிவை முன்மொழிவோரின் நம்பிக்கையாகும். எதிர்ப்புகளின் மூலம் எதையும் அடைய முடியாது என்பதுவும் இணைந்து சென்று பேச்சுவார்த்தைகள் மூலமே எதையும் சாதிக்கலாம் என்பதுவும் இவர்களின் சித்தாந்தமாகும். மேலும் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் களநிலைமையில் தமிழ் மக்களின் வாக்குகளின் பெறுமதி முன்னரைவிட உயர்வானதாக இருப்பதால் பேரம்பேசல் மூலம் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணமுடியும் என்பது இத்தெரிவை விரும்பும் தரப்பின் வாதமாகும். மேலோட்டமாகப் பார்க்கையில், இத்தெரிவை முன்மொழிவோரின் எதிர்கால எதிர்பார்ப்பு நியாயமானவையாகத் தெரிந்தாலும் கடந்தகால அனுபவங்கள் இவர்களின் எதிர்பார்ப்புகள் மெய்ப்படும் என்ற நம்பிக்கையைத் தருவதாக இல்லை.

முதலில் தமிழ் மக்கள் வாக்களிக்கும் வேட்பாளர் தான் வெற்றியடைவார் என்பதற்கு எந்தவித உத்தரவாதமும் இல்லை. கடந்த தேர்தல்களில் தமிழ்மக்கள் வாக்களித்த சரத் பொன்சேகா, சஜித் பிரேமதாச போன்றோர் தோல்வியையே அடைந்தார்கள். வெற்றி பெறுகிறார் என எடுத்துக்கொண்டாலும் அவர் தான் வழங்கிய வாக்குறுதியை நிறைவேற்றுவார் என்பதற்கும் எந்த உத்தரவாதமுமில்லை. நாடு சுதந்திரமடைவதற்கு முன்பிருந்து இன்றுவரையும் சிங்களத் தலைவர்கள் தமிழ் மக்களுடன் செய்துகொண்ட ஒப்பந்தங்களும் வாக்குறுதிகளும் காற்றில் பறக்க விட்டதே வரலாறு.

**சிங்கள மக்களுடனும் அவர்களின் தலைவர்களுடனும் கலந்துரையாடுவதன் மூலமே தமிழ்த் தேசியப் பிரச்சினைக்குத் தீர்வுகாணமுடியும். எனவே அவர்களில் ஒருவருக்கு வாக்களிப்பதன் மூலமே பேரம் பேச முடியும் என்று கூறுவோரின் சித்தாந்தம் ஏற்றுக்கொள்ளக் கூடியதே. எனினும் சிங்களத் தலைவர்கள் பேச்சுவார்த்தைக்கு உடன்பட வைப்பதற்கான முக்கிய தேவைப்பாடுகள் இரண்டு உள்ளன. ஒன்று தமிழர்கள் பலமாக இருப்பது. இரண்டாவது வெளிநாட்டு அழுத்தம். வெளிநாட்டு அழுத்தத்தை உருவாக்குவதற்குக்கூட தமிழர்களின் ஒன்று திரண்ட பலம் அவசியமாகும். புலிகள் பலமாக இருந்தபோது பேச்சுக்கு ஓடிவந்த சிங்களத் தலைவர்கள் அவர்களின் மறைவுக்குப் தமிழர்களுக்கு எவ்வித பிரச்சினைகளுமில்லை என்ற நிலைக்கு மாறியதை மக்கள் மறக்கமாட்டார்கள்.**

1921 இல் சேர். பொன். அருணாசலம் தொடங்கி, பண்டா-செல்வா ஒப்பந்தம், டட்லி-செல்வா ஒப்பந்தம், ரணில்- மைத்திரியுடன் சம்பந்தன் இதயத்தால் இணைந்தது வரையிலான கசப்பான அனுபவங்களையே தமிழ் மக்கள் பெற்றுள்ளனர் என்பதே உண்மையான வரலாறு. இந்தியாவுக்கு வழங்கிய 13+ மற்றும் சர்வதேச மனித உரிமை பேரவையுடனான உடன்பாடு போன்றவற்றையே மதியாத சிங்களத் தலைவர்களுக்கு தமிழ்த்தலைவர்கள் வெறும் தூசு மட்டுமே.

அடுத்த தெரிவு தமிழ் மக்கள் சார்பில் பொது வேட்பாளர் ஒருவரை இத்தேர்தலில் நிறுத்தி ஒட்டுமொத்த வாக்குகளையும் அவ்வேட்பாளருக்கு அளிப்பதன் மூலம் ஈழத்தமிழ் மக்களின் நிலையை தென்னிலங்கைக்கும் சர்வதேசத்திற்கும் எடுத்துச் சொல்ல முனைவதாகும். தேர்தலைப் புறக்கணித்தல் தென்னிலங்கை வேட்பாளருக்கு வாக்களித்தல்என்ற தமிழ் மக்களின் கடந்தகாலப் கசப்பான




**தெரிவு செய்யப்படும் ஜனாதிபதிகள் எல்லோரும் பௌத்த சிங்கள பேரினவாத அடிப்படையில் தமிழ் இனத்துக்கு எதிரான செயற்பாடுகளையே தொடர்ந்து செய்து வருகின்றனர். செய்யவும் போகின்றனர். தேர்தலில் பங்கெடுப்பதன் மூலம் அவர்களின் இத்தகைய இனவாதச் செயற்பாடுகளுக்கு இலங்கையர் என்ற அடிப்படையில் தமிழர்களும் அங்கீகாரம் வழங்குவதாகவே அமையும். தமக்கான அரசியல் உரிமைகள் கிடைக்கும் வரையில் இலங்கையின் ஜனாதிபதி தமக்கான ஜனாதிபதியல்லர் என்பதைத் தமிழ் மக்கள் இப்புறக்கணிப்பின் மூலம் வெளிப்படுத்த விரும்புகின்றனர் என்பவையே இதன் பின்னால் உள்ள நியாயங்கள் ஆகும்.**

பட்டறிவுகளின் விளைவே தமிழ் பொது வேட்பாளர் என்ற தெரிவுக்கு தமிழ்ச் சமூகத்தை தள்ளியுள்ளது எனலாம். இத்தெரிவின் பின்னாலுள்ள நியாயப்பாடுகளையும் அவசியத்தையும் அதனை முன்னெடுக்கும் தமிழ்க் குடிசார் பொதுக்கட்டமைப்பு மக்களுக்கு எடுத்துக் கூறிவருகிறது.

அவற்றுள் மிக முக்கியமான ஒன்று தமிழ் மக்களை அவர்களின் அரசியல் உரிமைகளைப் பெறுவதற்காக ஒன்றுதிரட்டுதல் ஆகும். 2010 வரை ஒரு நோக்கத்தின் அடிப்படையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கீழ் இறுக்கமான அரசியல் பலமாக ஒன்று திரண்டிருந்த தமிழ் மக்கள் இன்று பல்வேறு பிரிவுகளாகச் சிதறிச் சின்னாபின்னமாகி விட்டார்கள். பல்வேறு தமிழ் அரசியல் கட்சிகள், குழுக்கள், பல்வேறுபட்ட கோரிக்கைகள் என்பதற்கப்பால் தென்னிலங்கைத் தரப்புகளின் விசுவாசிகள் என தமிழர்களின் அரசியல் பலத்தைக் கூறு போடும் கைங்கரியங்கள் நாள்தோறும் அரங்கேறி வருகின்றன.
தமிழ் அரசியல் கட்சிகளும் அவற்றின் தலைவர்களும் மக்களுக்கான அரசியலைவிடத் தமக்கான அரசியலுக்கு முன்னுரிமை அளிக்கும் போக்கு அதிகரித்து வருகிறது. இவ்வாறான ஒரு நிலைமையில் தமிழ் மக்கள் அனைவரையும் அவர்களின் உயர்ந்தமட்ட அரசியற் கோரிக்கை ஒன்றின்கீழ் அணி திரட்டுவது அவசியமானது. ஜனநாயக அரசியல் முறைமையில் மக்களின் ஒன்றுபட்ட திரட்சியின் மூலமே தங்களது நோக்கங்களை அடைந்து கொள்ள முடியும். அதுவும் உரிமைகளுக்காகப் போராடும் ஒரு இனத்தின் பலம் மக்களின்திரட்சியிலேயே பெரிதும் தங்கியுள்ளது. இதற்கு மேலாக அரசியல் என்பது பதவிகளைப் பெறுவதற்கும் அதன் மூலம் அதிகாரங்களைச் செலுத்துவதற்கும் எனச் சுருங்கிவிட்ட மக்களின், குறிப்பாக இளைஞர்களின் சிந்தனையை மாற்றி அதற்கு மேலாக அரசியல் தமிழ் இனத்தின் விடிவுக்கானது என உணரவைக்க வேண்டும். “பிச்சை வேண்டாம் நாயைப் பிடி” என்று தமிழினம் தள்ளப்படும் நிலையை மாற்றி “நாம் கேட்பது பிச்சையன்று எமது உரிமை. நீ உனது நாயைக் கட்டிவை” என்ற ஒரு நிலையை த் தோற்றுவிப்பதற்கான முன்மொழிவே தமிழ்ப் பொது வேட்பாளர் என்று தமிழ்க் குடிசார் பொதுக்கட்டமைப்பினரின் வாதமாகும்.

தேர்தலைப் புறக்கணித்தல், தமிழ்ப் பொது வேட்பாளருக்கு வாக்களித்தல் என்ற இரண்டினதும் அடிப்படை நோக்கம் பொதுவானது. இலங்கையின் ஜனாதிபதித் தேர்தல் தமிழ் மக்களுக்கானதல்ல என்பதுவே அது. ஒன்று வாக்களிக்காமல் இருப்பது. மற்றது சிங்கள வேட்பாளர்களுக்கு வாக்களிக்காதிருப்பது. எனினும் இவற்றுள் முன்னது நிலையானது. பின்னது இயங்கு நிலை கொண்டது. புறக்கணித்தலின்போது மக்கள் அதன் நோக்கத்தை ஏற்றுக் கொண்டு வாக்களிக்காமல் விடுவர், நோக்கத்தை அடையும் உந்துதல் அதிகம் இருக்காது.

பொதுவேட்பாளருக்கு வாக்களிப்பதன் மூலம் மக்களை அவர்களின் அரசியல் உரிமையை அடைவதற்கான நோக்கத்தை அடுத்தகட்ட இயங்கு நிலைக்கு மாற்றமுடியும். ஒன்று நோக்கத்தை ஏற்றுக்கொண்டு படுத்திருப்பது. மற்றது நோக்கத்தை ஏற்று அதன் பால் முன்னேறுவது. இவ்வடிப்படையில் புறக்கணிப்பைவிட தமிழ்ப் பொதுவேட்பாளர் மேலானதாகத் தெரிகிறது.

சிங்கள மக்களுடனும் அவர்களின் தலைவர்களுடனும் கலந்துரையாடுவதன் மூலமே தமிழ்த் தேசியப் பிரச்சினைக்குத் தீர்வுகாணமுடியும். எனவே அவர்களில் ஒருவருக்கு வாக்களிப்பதன் மூலமே பேரம் பேச முடியும் என்று கூறுவோரின் சித்தாந்தம் ஏற்றுக்கொள்ளக் கூடியதே. எனினும் சிங்களத் தலைவர்கள் பேச்சுவார்த்தைக்கு உடன்பட வைப்பதற்கான முக்கிய தேவைப்பாடுகள் இரண்டு உள்ளன. ஒன்று தமிழர்கள் பலமாக இருப்பது. இரண்டாவது வெளிநாட்டு அழுத்தம். வெளிநாட்டு அழுத்தத்தை உருவாக்குவதற்குக்கூட தமிழர்களின் ஒன்று திரண்ட பலம் அவசியமாகும். புலிகள் பலமாக இருந்தபோது பேச்சுக்கு ஓடிவந்த சிங்களத் தலைவர்கள் அவர்களின் மறைவுக்குப் தமிழர்களுக்கு எவ்வித பிரச்சினைகளுமில்லை என்ற நிலைக்கு மாறியதை மக்கள் மறக்கமாட்டார்கள்.

அதேபோல அப்போது தீர்வுக்கு ஆர்வம் காட்டிய உலகம் இப்போது தமிழர்களை மறந்துவிட்டது என்பதுதான் யதார்த்தம். பலம் தான் எதனையும் நிரணயிக்கும் என்பது இயற்கை விதி. ஜனநாயக அரசியலில் மக்களின் விழிப்புணர்வும் ஒன்று திரட்சியுமே பலமாக அமையும். அதனை தமிழ்ப் பொது வேட்பாளரின் மூலம் உருவாக்க அதிகம் வாய்ப்புக்காணப்படுவதால் மேற்காட்டிய தெரிவுகள் மூன்றினுள் இன்றைய சூழலில் இது மேலானதாக அமைகிறது எனலாம். எனினும் பலமான தடைகள் நிறயவே உள்ளன. மேலும் மேலும் உருவாக்கப்படுவதற்கான வாய்ப்புகளும் அதிகம். அத்தடைகள் அனைத்தையும் தகர்த்து அதனை நடைமுறைச்சாத்தியமாக்குவது மக்களைப் பொறுத்தது. வரலாறே சிறந்த வழிகாட்டி என்ற மேலான வாசகத்தை நினைவிற்கொண்டு செயற்படுவதே நன்மை தரும்.



## புலம்பெயர் மண்ணில் தமிழ் செழித்திட தாய்மொழி உரையாடலே அவசியம்!

# சிட்னி நூல் வெளியீட்டில் மாத்தளை சோமு!

எதிர்காலத்தில் தமிழ் சமுதாயம் எத்தகைய வழியில் புலம்பெயர் நாடுகளில் மொழிப்பற்றுடன் வாழ வேண்டும் என்பதற்கு இன்றைய தமிழ் ஆர்வலரகளும், அறிஞர்களும், எழுத்தாளர்களும் வழிகாட்ட வேண்டும். இதன் மூலமே எதிர்கால சந்ததி செழிப்பாக தாய் மொழிப்பற்றுடன் வாழ முடியும் என எழுத்தாளர் மாத்தளை சோமு தெரிவித்தார்.

சிட்னி தமிழ் மன்றம் ஆதரவில் ஐங்கரன் விக்கினேஸ்வராவின் மூன்று நூல்கள் வெளியீடும் இலக்கிய அரங்கும் கடந்த வெள்ளி ஜுன் 7ம் திகதி நடைபெற்றது.

சிட்னியில் நடைபெற்ற இந்நிகழ்வில் தலைமையுரையை எழுத்தாளர் திரு. மாத்தளை சோமு மேலும் கூறுகையில், புலம்பெயர் மண்ணில் தமிழ் மொழியை பேணிக்காத்திட வீடுகளில் குழந்தைகளுடன் தாய் மொழியில் உரையாட வேண்டிய அவசியத்தையும் வலியுறுத்து உரையாற்றினார்.

எதிர்கால சமுதாயம், தமிழை விரும்பிப் படிக்கும் சூழலை உருவாக்க, தமிழின் வளர்ச்சி குறித்து எல்லோரும் அக்கறையோடு தங்களது பங்களிப்பினை செலுத்த வேண்டும். ஒரு மொழியின் வளர்ச்சி என்பது, அது பயன்பாட்டு மொழியாக இருக்கும் போதே கவனத்தில் கொள்ளப்பட வேண்டியதும் அவசியமாகும்.

உலகின் மூத்த மொழி என்று வரலாற்று ஆய்வாளர்களால் போற்றப்படும் மொழி எம்முடைய தமிழ்மொழி ஆகும். எம்மொழி எதிர்காலத்தில் நிலையாக மேலோங்க, அதைச் சரியாகப் புரிந்து கொண்டு, மொழி வளர்ச்சியில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டிய அவசியம் இருக்கிறது.

இன்றைய இளைய சமுதாயம், வேர்களைத் தேடுகிற காலம் இது. இந்தச் சூழலில் மொழியின் மீது எல்லோரும் நம்பிக்கை வைக்க வேண்டும். எதிர்கால சமுதாயம், தமிழை விரும்பிப் படிக்கிற சூழல் உருவாக்க வேண்டும். அதற்கான முன்னெடுப்புகளை நாம் நிச்சயமாக மேற்கொள்ள வேண்டும் என எழுத்தாளர் மாத்தளை சோமு அவர்களின் தலைமை உரையில் தெரிவித்தார்.

தாய் மொழி மட்டுமே சீனாவில் பேச்சுமொழியாக இருக்கிறது. அதனால்தான், சீனாவில் இளைய சமுதீயம் மிகவும் சரளமாகவும் இயல்பாகவும் தங்கள் மொழியை பேச முடிகிறது. அந்தத் திறனை தமிழ் மொழிக்கும் உரிவாக்க வேண்டும்,

எங்கள் தமிழ் மொழியை மொழியாக மட்டும் சித்திரிக்காமல், அது நம் கலாசாரத்தையும், பண்பாட்டையும் வாழ்வுநெறியையும் அறிய உதவும் காலக் கண்ணாடியாக உள்ளது. எதிர்காலத்தில் எவ்வாறு நமது மொழியின் தொன்மையை பாதுகாக்கலாம் என்பதில் முக்கியமான கடமை இன்று வாழும் தமிழ் அறிஞர்கள், எழுத்தாளர்களின் முக்கியமாக கடமை என்றும் எழுத்தாளர் மாத்தளை சோமு கூறினார்.

எதிர்காலத்தில் தமிழ் சமுதாயம் மேலும் வளர்ச்சியுற ஐங்கரன் விக்கினேஸ்வராவின் எழுத்துப்பணி பங்களிப்பை வழங்கும். இது போன்ற நூல் வெளியீட்டு நிகழ்ச்சிகளை நடாத்தி, எதிர்கால தமிழ் சந்ததியினர்க்கு வழிநடத்தும் தன்னம்பிக்கையைக் கொடுக்க வேண்டும் என்றார் எழுத்தாளர் மாத்தளை சோமு. பாலஸ்தீனம் எரியும் தேசம், ஓர்மத்தின் உறைவிடம் இஸ்ரேல், இலங்கை இதழியலில் சிவகுருநாதன் ஆகிய ஐங்கரன் விக்கினேஸ்வராவின் மூன்று நூல்கள் வெளியீடு சிட்னியில் உள்ள பெமுள்வே சமூக மண் டபத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வின் தலைமையுரையை எழுத்தாளர் திரு. மாத்தளை சோமு ஆற்றினார். அதன்பின் பாலஸ்தீனம் எரியும் தேசம் நூல் அறிமுகவுரையை திரு. தனபாலசிங்கம் நிகழ்த்தினார். அதன்பின் ஓர்மத்தின் உறைவிடம் இஸ்ரேல் நூலின் அறிமுகவுரையை டாக்டர். ஹாரூன் காசிம் அவர்கள் ஆற்றினார்.

இலங்கை இதழியலில் சிவகுருநாதன் நூலின் அறிமுகவுரையை எழுத்தாளர் திரு. சுந்தரதாஸ் அவர்கள் ஆற்றினார். இந்நூல் வெளியீட்டு நிகழ்வில் தினகரன் பிரதம ஆசிரியர் திரு. தே. செந்தில்வேலவர் சிறப்புரை நிகழ்த்தினார். அத்துடன் திரு. திருநந்தகுமார் அவர்களும், பாடும் மீன் சிறிஷ் கந்தராஜா இவர்களும் சிறப்புரை ஆற்றினர்.

சிட்னி தமிழ் மன்றம் ஆதரவில் நடைபெற்ற நூல் வெளியீடும் இலக்கிய அரங்கின் ஏற்புரையை திரு. ஐங்கரன் விக்கினேஸ்வரா அவர்கள் நிகழ்த்தினார்.






# வேண்டாத கோரிக்கையும் வெற்று வாக்குறுதியும்

இந்திய நாடாளுமன்றத் தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்டுக் கொண்டிருந்தபோது,சிவசேனை அமைப்பினர் யாழ்ப்பாண நகரில் பிரதமர் மோடியின் படத்துடன் வெற்றியை கொண்டாடினார்கள்.

அவர்களில் சிலர் ஏந்தியிருந்த சுலோக அட்டைகளில், “1987 இந்திய - இலங்கை ஒப்பந்தத்தை நிறைவேற்றுக“ என்று அச்சிடப்பட்டிருந்தது. அதற்கு சில நாட்களுக்கு பின்னர், வடக்கிற்கு பயணம் மேற்கொண்டு இருந்த எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, தான் ஆட்சிக்கு வந்ததுடன், அரசியலமைப்பின், 13ஆம் திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்துவேன் என்று கூறியிருக்கிறார். இந்த இரண்டும் ஒன்றுடன் ஒன்று தொடர்புபட்டவை இல்லை. ஆனால் தேர்தல் காலங்களில் இவை முக்கியத்துவம் பெறுகின்றன.

1987ஆம் ஆண்டு இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியும், சிறிலங்கா ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தனவும், செய்து கொண்ட ஒப்பந்தத்துக்கு அமைய, நாடாளுமன்றத்தில் கொண்டு வரப்பட்டதே 13ஆம் திருத்த சட்டம். இவை இரண்டும் கிட்டத்தட்ட நான்கு தசாப் தங்களாக நிறைவேற்றப்படாத விடயங்களாகவே இருந்து வருகின்றன. 13ஆம் திருத்தச் சட்டத்துக்கு அமைய, மாகாண சபைகள் உருவாக்கப்பட்டன. தேர்தல்கள் நடத்தப்பட்டன. ஆனால் அந்த திருத்தத்துக்கு அமைய, காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்கள் மாகாணசபைகளுக்கு பகிரப்படவில்லை. அதே வேளை, மாகாண சபைகளிடம் உள்ள அதி காரங்களை கொஞ்சம் கொஞ்சமாக பறிக்கின்ற நடவடிக்கைகள் மத்திய அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

குறிப்பாக மாகாண பட்டியலில் உள்ள பாடசாலைகள், தேசிய பாடசாலைகள் ஆக்கப்பட்டு, வருகின்றன. வைத்தியசாலைகளும் அவ்வாறே மாற்றப்படுகின்றன. இதனால் மாகாணசபையிடம் உள்ள கல்வி, சுகாதார அமைச்சு அதிகாரங்களும் பறிக்கப்பட்டு கொண்டிருக்கின்றன. இவ்வாறான சூழலில் கடந்த ஐந்து ஆண்டுகளுக்கும் மேலாக பெரும்பாலான மாகாண சபைகள் இயங்கவில்லை. அவையும் மத்திய அரசின் நேரடி கட்டுப்பாட்டிலேயே இருந்து வருகின்றன. இதனால் மாகாணங்களுக்கான அதிகாரப் பகிர்வு என்ற, 13 ஆவது திருத்தச் சட்டத்தின் அடிப்படையும், இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் நோக்கமும், முற்று முழுதாகவே குழி தோண்டி புதைக்கப்பட்டிருக்கிறது.

இந்த இரண்டும் கேள்விக்குறியாக மாறி உள்ள இந்த தருணத்தில் தான், இந்திய பிரதமர் நரேந்திர மோடியிடம் இந்திய- இலங்கை ஒப்பந்தத்தை நிறைவேற்றுக என்று கோரிக்கை சிவசேனையால் முன்வைக்கப்படுகிறது.

இன்னொரு பக்கம் 13 வது திருத்த சட்டத்தை நிறைவேற்றுவதாக சஜித் பிரேமதாசாவினால் வாக்குறுதி அளிக்கப்படுகிறது. ஆனால் இந்த இரண்டுமே தமிழ் மக்களின் அடிப்படைக் கோரிக்கைகளோ, அரசியல் அபிலாசைகளை நிறைவேற்றுகின்ற விடயங்களோ அல்ல. தமிழ் மக்கள் தங்களது நிலங்களில், மீளப் பறிக்க முடியாத தன்னாட்சி உரிமை பெற்றவர்களாக வாழ்வதற்கான அதிகாரப் பகிர்வையை எதிர்பார்க்கிறார்கள்.

ஆனால், இந்திய- இலங்கை ஒப்பந்தம் அதனை அங்கீகரிக்கவில்லை. அது இலங்கையின் ஒற்றையாட்சிக் கட்டமைப்புக்குள் மாகாணங்களுக்கு அதிகாரங்களை பகிரும் வகையிலான தீர்வையே முன் வைக்கிறது. வடக்கு -கிழக்கை இணைத்து ஒரு நிர்வாக அலகாக கருதி, அதற்கு அதிகாரங்களை பகிர்ந்தளிக்கும் இலக்குடன் தான் இந்திய - இலங்கை ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டது. ஆனால், அப்போதைய ஜனாதிபதி ஜே.ஆர்.ஜயவர்த்தன அவ்வாறான ஏற்பாட்டை செய்யவில்லை. வடக்கு - கிழக்கை அவர் தற்காலிகமாக இணைத்தார். ஆனால், அந்த இணைப்பு 2006இல் ஜே.வி.பி தொடர்ந்த வழக்கின் மூலம், உயர் நீதி மன்றத்தின் மூலம் துண்டிக்கப்பட்டது.

**தமிழ் மக்கள் தங்களது நிலங்களில், மீளப் பறிக்க முடியாத தன்னாட்சி உரிமை பெற்றவர்களாக வாழ்வதற்கான அதிகாரப் பகிர்வையை எதிர்பார்க்கிறார்கள். ஆனால், இந்திய– இலங்கை ஒப்பந்தம் அதனை அங்கீகரிக்கவில்லை. அது இலங்கையின் ஒற்றையாட்சிக் கட்டமைப்புக்குள் மாகாணங்களுக்கு அதிகாரங்களை பகிரும் வகையிலான தீர்வையே முன் வைக்கிறது. வடக்கு –கிழக்கை இணைத்து ஒரு நிர்வாக அலகாக கருதி, அதற்கு அதிகாரங்களை பகிர்ந்தளிக்கும் இலக்குடன் தான் இந்திய – இலங்கை ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டது. ஆனால், அப்போதைய ஜனாதிபத ஜே.ஆர்.ஜயவர்த்தன அவ்வாறான ஏற்பாட்டை செய்யவில்லை. வடக்கு கிழக்கை அவர் தற்காலிகமாக இணைத்தார். ஆனால், அந்த இணைப்பு 2006இல் ஜே.வி.பி தொடர்ந்த வழக்கின் மூலம், உயர்நீதிமன்றத்தினால் துண்டிக்கப்பட்டது.**

அது போல வடக்கு- கிழக்கை இணைத்து, அதிகாரத்தை பகிரும் திட்டத்துக்கு பதிலாக, இலங்கை முழுவதும் உள்ள எட்டு மாகாணங்களிலும் மாகாணசபைகளை உருவாக்கி அதனை பொதுவான தீர்வாக்க மாற்றினார் ஜே.ஆர்.

இந்திய -இலங்கை ஒப்பந்தத்தின் மூலம், தமிழர் பிரச்சினைக்கான தீர்வு என இந்தியாவினால் முன்மொழியப்பட்ட இந்த மாகாண சபைத் தீர்வு, தனித்துவமான ஒன்றாக இல்லாமல், இலங்கை முழுவதுக்கும் பொதுப்படையான ஒன்றாக மாறியது. அவ்வாறு மாற்றுவதன் மூலம், சிங்களவர்களின் எதிர்ப்பை குறைக்க முற்பட்டார் ஜே ஆர் என்ற கருத்து உள்ளது. ஆனால் உண்மை அது வல்ல.

ஒரு சிறிய கோட்டுக்குப் பக்கத்தில் பெரிய கோடு ஒன்றை வரைவதன் மூலம், அதனை எவ்வாறு பெறுமதியற்றதாக்க முடியுமோ, அதுபோலத்தான் மாகாண சபைகள் உருவாக்கத்தில் ஜே. ஆர் நடந்து கொண்டார். இந்திய- இலங்கை ஒப்பந்தம் தமிழர்களுக்காக செய்து கொள்ளப்பட்டது என்று கூறப்பட்டாலும், அதன் மூலமாக 13 வது திருத்தச் சட்டம் கொண்டுவரப்பட்டது, மாகாண சபைகள் உருவாக்கப்பட்டது, என்று பிரசாரங்கள் முன்னெடுக்கப்பட்டாலும், அதன் பயனை பெற்றது பெரும்பாலும் சிங்களப் பகுதிகள் தான். தமிழர்களின் பிரச்சினைகளை மாகாண சபைகள் தீர்க்கவில்லை. தமிழர்களின் உரிமைகளை அது உறுதி செய்யவில்லை. தமிழர்களுக்கான அதிகாரப் பகிர்வும் அதனூடாக இடம்பெறவில்லை.

இவ்வாறான நிலையில் மாகாண சபைகளையோ 13 வது திருத்தச் சட்டத்தையோ தமிழர்கள் எவ்வாறு தமது பிரச்சினைக்கான தீர்வு என ஏற்றுக்கொள்ள முடியும்? இந்த கேள்வி நீண்ட காலமாக இருந்து வந்த ஒன்று. போருக்கு பின்னரான சூழலில் தமிழ் தேசிய அரசியலின் கூர்ப்பு, மழுங்கடிக்கப்பட்டு வந்த சூழலில், வேறு வழியின்றி தமிழர் தரப்பில் உள்ள சிலர், கையில் எடுத்தது தான், இந்திய - இலங்கை ஒப்பந்தத்தை நிறைவேற்ற வேண்டும், 13 வது திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டும் என்ற கோரிக்கையாகும். இந்த இரண்டையும் நிறைவேற்றுவதன் மூலம் தமிழர்களின் பிரச்சினையை தீர்த்து வைக்க முடியாது. அதற்கான நிரந்தர தீர்வாக இவை அமையவும் முடியாது. இதனை இன்று நேற்று கூறவில்லை. தமிழர் தரப்பு 1987 ஆம் ஆண்டிலேயே இதனை கூறிவிட்டது.

தமிழர்களின் தாயகம், தேசியம், தன்னாட்சி உரிமை ஆகிய அங்கீகரிக்கப்பட்ட ஒரு தீர்வு தான் நிலையானதாக இருக்கும், நிரந்தரமானதாக இருக்கும் என்று, 1985 இல் திம்புவில் நடந்த பேச்சுவார்த்தையின் போது தமிழர் தரப்பினால் ஒன்றுபட்டு கோரிக்கை முன்வைக்கப்பட்டது. அதன் அடிப்படையிலான தீர்வு தான் அமைய வேண்டும் என்று எல்லா தமிழ் கட்சிகளும் வலியுறுத்தியிருந்தன. அதற்கு மாறாகவே இந்திய -இலங்கை ஒப்பந்தமும் அமைந்திருந்தது, அதனூடாக உருவான 13 வது திருத்தச் சட்டமும் அமைந்திருந்தது.

இவ்வாறான நிலையில், இந்த இரண்டையும் நடைமுறைப்படுத்துமாறு கூறுவது அல்லது இதனை நடைமுறைப்படுத்துவதாக வாக்குறுதி அளிப்பது என்பது , தமிழர்களின் அரசியல் அபிலாசைகளை நிறைவேற்றுகின்ற ஒன்றாக இருக்கப் போவதில்லை. வெறுமனே அதன் 13ஆவது திருத்தச் சட்டத்தை நிறைவேற்றுவதன் மூலம், தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு கிடைத்து விடாது.

அரசியலமைப்பில் உள்ள 13 வது திருத்தச் சட்டம் என்பது வெறுமையான ஒன்றாக மாற்றப்பட்டு விட்டது. பிரதான அதிகாரங்கள் மத்திய அரசினால் பிடுங்கப்பட்டு, மாகாண சபைகள் செல்லாக் காசாக மாற்றப்பட்டிருக்கிறது.


இதனை முழுமையாக நடைமுறைப்படுத்துவதாக கூறும் சஜித் பிரேமதாச, மாகாணங்களுக்கு பொலிஸ் மற்றும் காணி அதிகாரங்களை வழங்குவாரா? ஆட்சிக்கு வந்த பின்னர் அந்த வாக்குறுதியை நிறைவேற்றுவாரா? என்பதெல்லாம் இப்போது கூற முடியாது.

இந்திய அரசாங்கத்தை நோக்கி இந்திய- இலங்கை ஒப்பந்தத்தை நிறைவேற்றுமாறு விடுக்கப்படும் கோரிக்கைகளும் எந்தளவுக்கு கவனத்தில் எடுக்கப்படும் என்ற கேள்வியே இருக்கிறது. இதுபோன்ற கோரிக்கைகள் இதுவரை கவனத்தில் எடுக்கப்பட்டதில்லை என்ற அடிப்படையில் தான் அதனை கூற முடிகிறது.

13ஆவது திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்துமாறு இந்தியா அழுத்தம் கொடுக்கிறது, ஆனால் இலங்கை அரசாங்கம் நழுவிக் கொண்டிருக்கிறது என்று இந்திய தூதுவர் அண்மையில் கூறியிருந்தார். இதனை, இந்திய- இலங்கை ஒப்பந்தத்தின் பிரதான தரப்பான இந்திய அரசாங்கத்தின் பொறுப்புமிக்க பதிலாக கருத முடியாது.

தமிழர்கள் பங்காளிகள் ஆக்கப்படாமல், தமிழர்களுக்கான தீர்வை இந்தியாவே முன்வைத்த ஒப்பந்தம் அது. அந்த ஒப்பந்தத்தை நிறைவேற்றுச் செய்வது என்பது இந்தியாவின் கடப்பாடு. அதனைக் கூட இதுவரை காலமும் செய்யாத இந்திய அரசாங்கம், இனி மேலும் அதற்கு முயற்சிக்கும் என்று எவ்வாறு நம்பியிருக்க முடியும்?

**– என்.கண்ணன் –**



# ஈழத்தில் ஓர் வலிமைப்பெண்

## தனலட்சுமி முத்துக்குமார குருக்கள்

உலகளாவிய ரீதியில் தம் திறமைகளை வெளிக்காட்டி பல ரசிகர்களை தன் பால் ஈர்த்து வைத்திருக்கும் பல இலட்சக்கணக்கான சாதனையாளர்களை நாம் பார்த்திருப்போம். அவர்களை தங்களுடைய இலக்கை அடைய மேற்கொண்ட முயற்சிகள், எதிர் நோக்கிய இன்னல்கள், அதற்கான எதிர் நீச்சல்கள் பல. இவ்வாறே துன்பங்களை சந்தித்து இருந்தாலும் தமிழர்களின் திறமைகளின் உலகறியச் செய்த தமிழ் சாதனையாளர்களை அதிலும் ஈழத்து பெண் சாதனையாளர்கள் சிலரையாவது நாம் அறிந்திருக்க வேண்டும். இலங்கையில் தமிழர்களின் திறமைகளை வெளிக்கொண்டுவரப்படுவது மிகவும் குறைவாயினும் சிலர் தமது விடாமுயற்சியால் வெற்றிவாகை சூடியுள்ள பல சந்தர்ப்பங்கள் உண்டு என்பதில் ஐயமில்லை.

இலங்கையில் வடமகாணத்தில் கடலால் சூழப்பட்ட தமிழ் பாரம்பரியத்தை பறைசாற்றும் யாழ்குடா நாட்டில் காங்கேசன்துறை எனும் இடத்தில் ஒரு அடக்குமுறைகளும் கலாச்சார அடக்கத்தினுள்ளும் இருக்கும் ஒரு பிராமண குடும்பத்தில் பிறந்தவர் தனலட்சுமி முத்துக்குமார குருக்கள். தனலட்சுமி முத்துக்குமார குருக்கள் பெண்களையும் ஈழத்தினையும் பெருமைபடுத்தும் பல சாதனைகளை பாரம் தூக்கும் துறையில் புரிந்துள்ளார். அவருடனான நேர்காணல் இது.

**உங்களைப் பற்றிய சிறு அறிமுகத்தை எங்களுடன் பகிர்ந்து கொள்வீர்களா?**

நான் ஒரு முகநூலில் கவிஞர். பாடல்கள் எழுதி பாடலாசிரியர் விருது பெற்றுள்ளேன். கவிதைத் துறையில் இருக்கும் போது தொலைக்காட்சியில் பங்கு பெற வாய்ப்பு கிடைத்திருந்தது. யாழ்ப்பாணத்தில் காங்கேசன்துறையில் என் ஆரம்பப் பள்ளியை அங்கேயே படித்தேன் பின்பு சிறிது காலம் வவுனியாவில் இருந்தேன். திருமணமாகியதன் பின் எனது உடல் எடை அதிகரித்தனால் அங்கு உடற்பயிற்சி மையத்தில் பயிற்சி பெற்று தற்போது கொழும்பு வெள்ளவத்தையில் வசிக்கிறேன். அங்கு உடற்பயிற்சி மையத்தில் பயிற்றுவிப்பாளராக கடமை ஆற்றுகின்றேன். அங்கிருந்தே இத்துறைக்கு என்னை வித்திடுதேன்.

**பளுதூக்கும் போட்டிகளில் கலந்து கொள்ள வேண்டும். இத்துறையில் சாதிப்பதற்கான ஆர்வம் உங்களுக்கு எவ்வாறு ஏற்பட்டது?**

திருமணத்திற்கு பின் என் உடல் எடை 120 கிலோவாக இருந்தேன். என் எடையை குறைப்பதற்காகவே முதலில் ஜிம் சென்றேன். என் கடின பயிற்சியினால் நான்கு மாதத்தில் 37 கிலோ வரை எடையை குறைத்தேன். அதன் பின் அத்துறையில் ஏற்பட்ட போதையினால் அத்துறையிலேயே என்னை போன்ற எடை குறைய நினைக்கும் பெண்களுக்கு உதவி புரிய வேண்டும் என்ற ஆர்வமும் உண்டாகி பயிற்றுவிப்பாளராக ஆக வேண்டும் என்று உறுதி கொண்டு களனி South Asian Sports Science Academy NVQ4 தேர்ச்சி பெற்று பயிற்சிவிப்பாளராக தற்போது பணியாற்றுகின்றேன். பயிற்சி காலத்தில் என்னுடைய மேலதிக அறிவுக்காக முஹமட் அரபாத் எனும் மாஸ்டரிடம் NSS அக்கடமியில் பயிற்சிக்குச் செல்லும்போது என் திறமையினையும் அர்ப்பணிப்பையும் பார்த்து என்னை அவர் பழுது தூக்கும் போட்டிகளில் கலந்து கொள்ள வைத்தார். முதன் முதலில் கம்பஹா மாவட்டத்தில் power fight கிளப்பில் நடத்தப்பட்ட போட்டியில் பங்குபெற்றி முதலாவது இடத்தை தட்டிச்சென்றேன். அதிலிருந்து எனக்குள் ஒரு ஆர்வம் என்னால் முடியும் என்று அங்கேயே பயிற்சி பெற தொடங்கினேன். பயிற்சி பெற்றுக் கொண்டே நானும் பயிற்சி வழங்கிக் கொண்டே இருந்தேன் முழு முயற்சியினால் வெற்றியை என தாக்கிக் கொள்ள என்னை கட்டமைத்தேன். நானும் ஒரு நட்சத்திரமாக வேண்டும் என்ற எண் ணம் தோன்றியது அதன் பின்பே இத்துறையை தெரிவு செய்து என் திறமைகளை வளர்த்துக் கொண்டேன்.

**உங்களது இந்த வெற்றிப் பயணத்தில் நீங்கள் ஒரு பெண்ணாக பல சவால்களை சந்தித்திருப்பீர்கள். அது பற்றி கூற முடியுமா?**

முதலில் என் வீட்டில் இதை ஒத்துக் கொள்ள வைப்பது பெரிய சவாலாக இருந்தது. உடல் எடையை குறைத்த பின் அவர்கள் செல்ல வேண்டாம் அங்கே என்றார்கள். நான் அடம் பிடித்து எனக்கு ஆர்வமுள்ளது என வற்புறுத்தி துறைக்கு வந்தேன். ஒரு பெண்ணாக மற்றும் ஒரு பிராமண குடும்பத்தில் இருந்து வந்து இத்துறைக்கு செல்வதை எங்கள் சமூகம் எப்போதும் ஏற்காது அதனை தாண்டி முன்னேறினேன்.

ஒரு பெண்ணாக உடல்ரீதியாகவும் சரி மன ரீதியாகவும் சரி வலிமையாக இருந்தாலும் மாதவிடாய் காலங்களில் என் பயிற்சிகள் தடைப்பட்டன. ஒரு வாரம் பயிற்சி பெறாமல் மீண்டும் அடுத்த வாரம் பயிற்சி எடுத்தால் உடல் வலி அதிகமாகும் கஷ்டமாகவும் இருக்கும் இருப்பினும் பல்லை கடித்துக் கொண்டு சாதிக்க வேண்டும் என்று சவாலில் செயற்பட்டேன்.

எனது வெற்றியை குடும்பம் கொண்டாடா விட்டாலும் எதிர்ப்புக்கள் குறைந்தது. அது எனக்கு மிகப்பெரிய பக்கபலமாக இருந்தது. பயிற்சி வழங்கும் பயிற்றுவிப்பாளராக கடமை ஆற்றிக்கொண்டே அதில் வரும் வருமானத்தைக் கொண்டே எனது பிள்ளைகளின் படிப்பு செலவு எனது உடற்பயிற்சிக்கு தேவையான செலவுகளை சமாளிக்க வேண்டிய வறுமை நிலைமையை கடப்பதற்கு பெரிய சவால்.

அதனை தாண்டி இந்த துறையில் அவசியமானது சத்துணவு. நான் பிராமண குடும்பத்தை சேர்ந்ததால் மாமிசம் உண்பதில்லை. அதனைத் தவிர சைவ உணவுகளையே உள்ளெடுத்தேன். Protein மாக்கள் எடுத்தேன். நான் என்பது 80+ இடை பிரிவில் பங்குபற்றியதால் உடல் எடை தடையாக இல்லை. மாமிசம் உண்ணாமலேயே நான் எனது உடலை கட்டமைக்க முடிந்தது. இவ்வாறான சவால்களையும் முறியடித்துக் கொண்டே முன்னேற வேண்டிய நிலை ஏற்பட்டது.

**திறமைசாலிகள் எதிர்நோக்கும் மிகப்பெரிய சிக்கல்கள் பொருளாதாரம். அந்த வகையில் இத்துறையில் நீங்கள் எதிர்கொள்ளும் பொருளாதார சிக்கல்கள் பற்றி கூற முடியுமா?**

எல்லோரையும் போல சாதிக்க வேண்டும் என நினைப்பவர்களுக்கு பொருளாதாரம் தடையாக இருப்பது போல தான் எனக்கு ஒரு பாரியளவு தடையாக அமைந்துள்ளது. உடல் கட்டுமானத்திற்கு தேவையான உடைகள், உபகரணங்கள், சத்துணவுகள், மருந்துகள் போன்ற அத்தியாவசிய தேவைகளை கூட பூர்த்தி செய்து கொள்ள முடியாத நிலைதான் உள்ளது. முக்கியமாக சத்துணவு நான் மாமிசம் சாப்பிட மாட்டேன் அதனால் மற்றவர்களை விட அதிக அளவு போசாக்குணவு எனக்கு தேவைப்பட்டது.

அவற்றினை எடுத்துக் கொண்டே தான் இருந்தேன். இறுதிப்போட்டி காலங்களில் குறிப்பாக தற்போது கலந்து கொண்ட போட்டி காலத்தில் பொருளாதாரம் என்னை கடுமையாக இறுக்கியதால் அவற்றை எடுக்க முடியவில்லை அவற்றுக்கான உதவிகள் கிடைத்தால் இன்னும் முன்னேற முடியும். நான் தற்போது பயிற்றுவிப்பாளராக பணிபுரிந்து கொண்ட எனது பயிற்சிகளை பெறுகின்றேன். பொருளாதார நெருக்கடியினால் முழுமையாக இதில் பயிற்சி பெற முடியவில்லை.

**பளுதூக்கும் துறையில் நீங்கள் பல சாதனைகளைப் புரிந்துள்ளீர்கள். அவற்றை எங்களுடன் பகிர்ந்து கொள்ள முடியுமா?**

என்னதான் இந்த சமூகம் என்னை ஏற்றுக் கொள்ளாவிட்டாலும் தனக்கு ஆர்வம் உள்ள துறையில் முழுமூச்சாக பல பயிற்சிகளில் முழு நேரமாக இல்லாவிட்டாலும் என் கவனத்தை செலுத்தி படிப்படியாக வெற்றிகளை பெற்றேன்.

டெட் லீஃப்ட் பவலிஃப்ட் சாம்பியனில் (deadlift powerlift) முதன்முறையாக 2023.09.28 பங்குபற்றி முதலாம் இடத்தை பெற்றேன். அதனை விட நேஷனல் பவர் லிப்டிங் சாம்பியனில் (National power lifting) 2024.01.14 ஆம் ஆண்டு பங்கேற்று இரண்டாம் இடத்தை பெற்றேன். 2024.03.02 இடம்பெற்ற ஸ்டோன் வுமன் சாம்பியனில் (strong women champions) முதலிடத்தை பெற்று தங்கப்பதக்கத்தினை பெற்றுள்ளேன் என்பதை பதிவு செய்வதில் ஒரு பெண்ணாக பெருமை கொள்கிறேன். இந்த வெற்றிகளே என்னை கேலி கிண்டல் செய்தவர்களுக்கு பதிலடி.

**strong women champions இல் வலிமையான பெண் பட்டத்தை பெற்றுள்ளீர்கள். அது தொடர்பான உங்கள் அனுபவத்தை பகிர்ந்து கொள்ள முடியுமா?**

எனது பயிற்சிவிப்பாளர் மூலம் போட்டியில் கலந்து கொண்டேன். நான் இதுவரை காலமும் பங்குபற்றிய போட்டிகளை விட மிகவும் கடுமையாக இருந்தது அதைவிட வித்தியாசமான போட்டி முறையாகும்.

போட்டி என்று வந்தபின் வலிகளையும் கஷ்டங்களையும் தாண்டி எல்லாவற்றையும் வெற்றி பெற வேண்டும் என்ற எண்ணமே என் மனதில் ஓடிக்கொண்டிருந்தது. 80+ இடை பிரிவில் நானே முதலாவது எடையை தூக்கினேன். தூக்கி விட்டு வந்தவுடன் மூச்சுத்திணறல் ஏற்பட்டு என்னால் மூச்சு விட முடியவில்லை. அப்போது கூட என் பின்னால் எடை தூக்க வந்தவர்கள் எப்படி தூக்குகிறார்களே என்னை விட எவ்வளவு சிறப்பாக செய்கிறார்கள் என்றே என் கண்கள் தேடிக் கொண்டிருந்தது. மூச்சு நின்றாலும் வெற்றி பெற வேண்டும் என்ற எண்ணமே வெறியாக இருந்தது, எனது கணக்கின்படி இரண்டாவது இடம் எனக்கு கிடைக்கும் என்ற எண்ணத்தில் தான் இருந்தேன். ஆனால் என் பெயரை முதலிடத்தில் அழைக்கும் போது என் கால்கள் தரையிலேயே இல்லை. அந்த நிமிடம் என் வலிகள் கஷ்டங்கள் என் கண்ணீருடன் கரைந்தது. அந்த போட்டியில் பங்கு பெற்றவர்களில் நான் ஒருவரே தமிழர் அதிலும் ஈழத்துப்பெண் என்பதில் ஒரு கர்வம்.

**ஒரு பெண்ணாக இத்துறையில் நீங்கள் பயணிக்கிறீர்கள். இத்துறை சார் பெண்கள் பற்றி ஆண்களின் பார்வை எவ்வாறு உள்ளது என நீங்கள் நினைக்கிறீர்கள்?**

என்னுடைய அனுபவத்தில் கூற வேண்டுமாக இருந்தால் ஆரம்பத்தில் என்னை ஒரு கேலி கிண்டலாக பார்த்தார்கள். யாருடா அவா முரட்டு ஆளா இருக்கா என்று எல்லாம் கூறினார்கள்.

ஆனால் இப்போது எல்லாம் அப்படி இல்லை எனது வெற்றிகளுக்குப் பின் எனக்கு பாரிய மரியாதை வழங்குகின்றார்கள். நான் ஆண்களுக்கும் பயிற்சிகளை வழங்குகின்றேன். இவ்வளவு வெற்றி பெறுவதற்கு அவர்கள் மிக உறுதுணையாக உள்ளார்கள். இன்னும் கூற போனால் இவ்வாறு சாதிக்க நினைக்கும் பெண்களை மதிக்கிறார்கள், வரவேற்றுகிறார்கள் பின்னோக்கி தள்ளுவதாக இல்லை என நான் நினைக்கிறேன்.

**உங்களைப் போல் சாதிக்க நிறைய பெண்களுக்கு ஆசையாக உள்ளது. அவர்களுக்கு நீங்கள் என்ன கூற விரும்புகிறீர்கள்?**

நீங்கள் உங்களை நம்புங்கள் முதலில் என்னால் முடியும் என்னால் இவற்றை சாதிக்க முடியும் என்ன தடைகள் வந்தாலும் வெல்ல முடியும் என உங்களை நீங்கள் நம்புகிறீர்கள். என் அனுபவம் கூட இது அவர்கள் என்ன கூறுவார்கள் சமூகம் என்னை ஏற்குமா? என்று தயங்காமல் உங்களுக்கு ஆர்வமுள்ள துறையில் உங்களை முன்னிறுத்துங்கள். அப்போது அதே சமூகமும் உங்களைப் போற்றும் உங்கள் கருத்துக்களை திறமைகளை முதலில் நீங்கள் தான் கொண்டு வர வேண்டும் உங்கள் கருத்தை கேட்பவர்கள் உங்களுடன் கண்டிப்பாக பயணிப்பார்கள்.

**– ஸ்ரீதரன் தமிழினி –**



# இலங்கைக்குள் இனி ஒரு தீர்வை எதிர்பார்ப்பது அடி முட்டாள் தனம்!

# ஜனாதிபதி தேர்தலில் தமிழ் பொது வேட்பாளர் ஒருவர் போட்டியிடுவது அவசியம்!!

## தமிழ்த் தேசியக் கட்சியின் செயலாளர் சிவாஜிலிங்கம்!

**தமிழ் வேட்பாளர் தொடர்பில் உங்களுடைய நிலைப்பாடு என்ன?**

**பதில் -** இலங்கையில் நடைபெறவிருக்கும் ஒன்பதாவது ஜனாதிபதி தேர்தலில் தமிழ் பொது வேட்பாளர் ஒருவர் போட்டியிடுவது அவசியமாகும். இலங்கைத் தீவுக்கு சுதந்திரம் கிடைத்து 75 ஆண்டுகள் கடந்தும், குடியரசாக்கப்பட்டு 50 ஆண்டுகள் கடந்தும் எங்களுடைய பிரச்சினைக்கு தீர்வுகள் இதுவரையில் கிட்டவில்லை. எனவே இலங்கைக்குள் இனி ஒரு தீர்வை எதிர்பார்ப்பது அடி முட்டாள் தனமானமாகும். எனவேதான் தமிழ் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்தி அவருக்கு தமிழ் மக்கள் வாக்களிக்க வேண்டிய தேவை தற்போது எழுந்திருக்கிறது. ஈழத் தமிழ் மக்களைப் பொறுத்தவரை சர்வதேச சமூகத்தின் உதவியுடன் எங்களுடைய கோரிக்கைகளை நிலை நிறுத்துவதற்கு இந்த தமிழ் வேட்பாளர்களை நாங்கள் பயன்படுத்த முடியும் என்பதுதான் என்னுடைய கருத்தாகும்.

**பொதுவேட்பாளர் தெரிவு எவ்வாறிருக்க வேண்டும் என நீங்கள் கருதுகிறீர்கள்?**

**பதில்-** நடை பெவிருக்கின்ற ஜனாதிபதி தேர்தலில் பொது வேட்பாளர் என்பதை விட பொதுக் கோரிக்கை தான் முக்கியமானது.

பொது வேட்பாளர் என்பது ஒரு அடையாளமான விடயம் ஏற்கனவே மக்கள், சமூகம் அவர்களுடைய கோரிக்கைகள் மற்றும் நடவடிக்கைகளை வைத்தே அவர்கள் தான் தீவிரம் காட்டுகிறார்கள். பொது வேட்பாளர் சம்பந்தமாக அரசியல் கட்சியுடன் பேசுவதாக தமிழ் தேசிய அணிகளாக இருக்கக்கூடியவர்களுடன் பேசுவதாக சொல்லப்பட்டிருந்தாலும் அவ்வாறான சூழ்நிலையில் பொது மகன் ஒருவர் பொது வேட்பாளராக போட்டியிடுவதாக இருப்பபின் அவர் அரசியல் கட்சி ஒன்றின் சின்னத்தில் தான் போட்டியிட முடியும். அவ்வாறு இல்லையெனில் சுயேட்சையாக ஒருவர் போட்டியிடுவது என்றால் இந்நாள் அல்லது முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினராகவோ இருப்பதன் அடிப்படையில் போட்டியிட முடியும்.

இதனடிப்படையில் தான் 2019 ஆம் ஆண்டில் அன்றைய பாராளுமன்ற உறுப்பினராகவும் 2019 முன்னாள் பாராளுமன்ற உறுப்பினராகவும் பதவி வகித்த சிவாஜிலிங்கம் ஆகிய நான் சுயேட்சையாக தேர்தலில் போட்டியிட்டேன். எனவேதான் முதலில் ஏதாவது ஒரு கட்சி முன்னுக்கு வரவேண்டிய தேவை பொது வேட்பாளர் யார்? என்பதை விட முன்னுரிமை பெறுகின்றது. பொது வேட்பாளர் ஏற்கனவே அவர்கள் பேசியதைப்போல ஒரு மாவட்டத்தை தனியாக பிரதிபலிக்காமல் அல்லது பொதுவாக வடகிழக்கு பகுதியைச் சேர்ந்தவராக ஒரு பொது மகனை நிறுத்தி னால் நல்லது என்ற ஒரு நிலைமை இருக் கிறது என்னைப் பொறுத்தவரையில் கட்டாயமாக காணாமல் போகச் செய்யப்பட்டவர்களுடைய பிரதி நிதி ஒருவரை நிறுத்துவது சாலப் பொறுத்தமாக இருக்கும் என்பது தான் என்னுடைய கருத்து.

> **பொது வேட்பாளர் ஏற்கனவே அவர்கள் பேசியதைப் போல ஒரு மாவட்டத்தை தனியாக பிரதிபலிக்காமல் அல்லது பொதுவாக வடகிழக்கு பகுதியைச் சேர்ந்தவராக ஒரு பொது மகனை நிறுத்தினால் நல்லது என்ற ஒரு நிலைமை இருக்கின்றது. என்னைப் பொறுத்த வரையில் கட்டாயமாக காணாமல் போகச் செய்யப்பட்டவர்களுடைய பிரதி நிதி ஒருவரை நிறுத்துவது சாலப் பொறுத்தமாக இருக்கும் என்பது தான் என்னுடைய கருத்து.**

**வேட்பாளர் தெரிவு இன்னமும் நடைபெறாத நிலையில் அத்தெரிவு நீங்களாக இருந்தால் உங்களது முடிவு எவ்வாறு இருக்கும்?**

**பதில்-** பொதுவாக ஒரு கட்சியை சாராத ஒருவரை அவர்கள் தெரிவு செய்கின்ற போது ஒரு அரசியல் கட்சி உதவி செய்ய வேண்டிய தேவை இருக்கிறது. எனவே இந்த இடத்தில் இந்தப் பிரச்சினைக்கு முதல் முடிவு கட்ட வேண்டிய ஒரு தேவை இருக்கிறது. இதை எல்லாம் கடந்துதான் ஒரு பொது மகனை வேட்பாளராக நிறுத்த வேண்டும். அவ்வாறு நிறுத்த முடியாத ஒரு நிலைமையை ஏற்பட்டு வேட்பாளரே இல்லை என்ற ஒரு நிலைமை ஏற்பட்டும் பட்சத்தில் கடைசி ஆளாக நான் வேண்டுமென்றால் போட்டியிடுவதற்கு தயாராக இருக்கின்றேன். ஆனால் அது ஒரு பொருத்தமான நடவடிக்கையாக இருக்கும் என்று நான் கருதவில்லை ஏனென்றால் ஒரு அரசியல் கட்சியை நாம் அனைவரும் சேர்ந்து அதை சரி செய்து ஒரு அரசியல் கட்சியுடைய பெயரிலே ஒரு பொதுவேட்பாளரை நிறுத்துவது தான் சாலப் பொருத்தமாக இருக்கும் என நான் கருதுகின்றேன்.

**மாகாண உள்ளூராட்சித் தேர்தல்கள் பல வருடங்களாக நடைபெறவில்லை. இத் தேர்தல்கள் குறித்து உங்களுடைய பதில் என்ன?**

**பதில் -** இலங்கையின் தேர்தல் வரலாற்றை எடுத்துக்கொள்வோமேயானால் பாராளுமன்ற தேர்தல் மற்றும் ஜனாதிபதி தேர்தல் என்பவைதான் குறிப்பிட்ட காலத்திலே நடத்தப்பட வேண்டும் என்று இலங்கையினுடைய அரசியலமைப்புச் சட்டம் தெளிவாக கூறுகின்றது.

இங்கு மாகாண சபைக்கான தேர்தல் வருடக்கணக்கில் நடைபெறவில்லை . இத்தேர்தல்கள் உடனடியாக நடைபெறுவதாக இருந்தால் கூட எதிர்வருகின்ற ஜனாதிபதி தேர்தல் முடிவடைந்து உடனடியாக பாராளுமன்ற தேர்தல் வர வேண்டிய ஒரு தேவை இருக்கிறது இவ்வாண்டிலே பாராளுமன்ற தேர்தல் நடைபெற்றால் அதன் பின்னர் 2024 இறுதிப் பகுதியிலோ அல்லது 2025 ஆரம்பப் பகுதியில் தான் மாகாண சபை தேர்தலுக்கான வாய்ப்புகள் இருக்கின்றன 2025 மாகாண சபைத் தேர்தல் நடைபெற்றால் 2025ம் ஆண்டு பிற்பகுதியில் உள்ளூராட்சித் தேர்தல் நடப்பதற்கு வாய்புள்ளது. எனவே 2018 இல் முடிவடைந்த அந்த ஊள்ளூராட்சி சபையினுடைய பதவி காலங்கள் ஆறு, ஏழு வருடங்க ளாக பொதுமக்கள் ஆட்சியில் இல்லாமல் இருப்பது சீரழிவான நிலைமை.

இது எல்லாம் அரசியல் தேவைக்காக மட்டுமே நடத்தாமல் இருக்கின்றார்களே தவிர வேறோன்றும் அல்ல. இலங்கையில் அந்தந்த இடங்களில் மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள் இருக்கிற பொழுது அது உள்ளூராட்சி மன்றங்களாக இருந்தாலும் மாகாண சபைகளாக இருந்தாலும் வேறு ஏதாவது சபைகளாக இருந்தாலும் நடைமுறை போற்றுவதற்கு அல்லது பின்பற்றுவதற்கு உதவியாக இருக்கும். ஆகவே இது எதிர்காலத்திலாவது காலியாக இல்லாமல் உடனடியாகவே பதவி முடிகின்ற நேரத்திலேயே தேர்தல் நடத்தப்படுவதற்கான சட்ட ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும்.

**கனடா உட்பட பல நாடுகள் இன அழிப்பு தொடர்பில் தீர்மானங்களை அறிவித்து வரும் நிலையில் சர்வதேச விசாரணை நடைபெற வாய்ப்பிருக்கிறதா?**

**பதில்-** உலகத்திலே பல நாடுகள் இப்பொழுது இதில் கூடிய ஆர்வம் காட்ட ஆரம்பித்திருக்கின்றன.

கனடா நாட்டின் பிரதமர் இலங்கையில் நடைபெற்றது இனப்படுகொலை தான் என்ற விடயத்தை தெட்டத்தெளிவாகக் கூறியிருக்கின்றார். அதைப் போல இந்தியாவினுடைய உள்துறை அமைச்சர் திரு. அமித்ஷா அவர்கள் ராமேஸ்வரத்தில் வைத்து இலங்கையில் நடைபெற்றது இனப்படுகொலை என்ற கருத்தை கூறியுள்ளார். இவ்வாறான சூழ்நிலையில் சர்வதேச விசாரணை என்பது இரண்டு கட்டங்களாக இரண்டு தளத்தில் நடைபெற வேண்டும்.

ஒன்று ”சர்வதேச நீதிக்கான நீதிமன்றம்”. இங்கே நாடுகள் தான் வழக்கு களை தாக்கல் செய்ய முடியும். ஒரு தனி நபரோ அல்லது அமைப்புக்களோ வழக்குத் தாக்கல் செய்ய முடியாது. உதாரணமாக இஸ்ரேல், பலஸ்தீனப் பிரச்சினையை எடுத்து கொண்டோமானால் அங்கே தென்னாபிரிக்கா வழக்குத் தாக்கல் செய்திருக்கின்றார்கள். எத்தனையோ முஸ்லீம் நாடுகள் இருந் தும் கூட இதே போல சர்வதேச நீதிக்கான நீதிமன்றத்திலோ, சர்வதேச குற்றவியல் நீதி மன்றத்திலோ தான் ஆட்சிக்கு வந்தால் வழக்கை தொடுப்பேன் என்று கனடா பிரதமர் கூறியிருக்கின்றார். ஆகவே இதற்கான வாய்ப்புக்கள் இருக்கின்றன. இரண்டாவது சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் இதிலே தனிநபர்களுக்கு எதிராகத் தான் வழக்குகளை தாக்கல் செய்ய முடியுமே தவிர அரசுகளுக்கு எதிராக வழக்குகளை தாக்கல் செய்ய முடியாது. இலங்கை அரசை இங்கே குற்றம் சாட்ட முடியாது தனிநபர்களான முன்னாள் ஜனாதிபதி, பிரதமர், இராணுவத் தளபதி போன்றவர்களைத்தான் குற்றஞ்சாட்ட முடியும் ஆகவே இந்த விசாரணைகள் நடைபெறுவதற்கான வாய்ப்புக்கள் எதிர்காலத்தில் பிரகாசமாக இருக்கின்றன.

**வடக்கு கிழக்கு தமிழர் தாயகப் பகுதிகளில் தொடரும் பெரும்பான்மையினரின் தமிழ்மக்களுக்கெதிரான செயற்பாடுகளுக்கு எவ்வாறு தீர்வைக்காணலாம்.**

**பதில்-** இதற்கு நிரந்தரமான தீர்வை காண்பதாக இருந்தால் இலங்கை என்ற ஒரு நாட்டுக்குள்ளே நாங்கள் வாழ்ந்து கொண்டிருக்கும் வரை சிங்கள பௌத்த துறவிகளுடைய ஆட்சி அட்டகாசம் இருக்கத்தான் செய்யும். அந்த வகையில் இப்பொழுது நாங்கள் எதிர்த்து போராட்டங்களை நடத்துவது சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வது முதலாவது தற்காலிகமான நடவடிக்கையாக இருக் கும்.

இன்னொன்று சர்வதேச சமூகத்தினருடைய உதவியை நாங்கள் நாடி ஒரு இடைக்கால ஏற்பாடுகள் எதாவது நடைபெறுகின்ற போது அவர்கள் ஐ.நா. வினுடைய மேற்பார்வையில் நிறுவினால் ஐ.நாவுக்கு கீழே பாதுகாப்பு கிடைக்கும். இவற்றுக்கு மேலாக சர்வதேச ரீதியாக நாங்கள் எங்களுடைய சுயநிர்ணய உரிமையை வலியுறுத்தக்கூடிய விதத்திலே ஒரு பொதுமக்கள் வாக்கெடுப்பை கோரி அதை நோக்கி பயணிப்போமாக இருந்தால் இதற்கான நிரந்தர தீர்வை காண முடியும் .

**ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான அறிக்கையை இலங்கை அரசு ஒருதலைப்பட்சமானது என தெரிவித்துள்ளது இதை நீங்கள் எவ்வாறு பார்க்குறீர்கள்?**

**பதில் -** இலங்கை அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான போராட்டம் 2009இல் முடிவடைந்ததைத் தொடர்ந்து ஐ.நா செயலாளர் நாயகத்தால் தெரிவிக்கப்பட்ட கூட்டறிக்கையில் இருந்து இலங்கை அரசின் சுத்துமாத்துக்களும், ஏமாத்துக்களும் ஆரம்பிக்கப்பட்டுவிட்டது. ஐ.நா மனித உரிமை பேரவையானது வருடக்கணக்கில் நாட்களை கடத்தி அதில் முப்பதின் கீழ் ஒன்று என்ற தீர்மானத்திற்கு இணை அனுசரணை வழங்குவதாக கூறியிருந்தார்கள் பின்னர் கொடுத்து கெடுப்பது போல ஒரு விடயத்தை செய்ய முற்பட்டார்கள். அதன் பின்னர் நாங்கள் இந்த ஐ.நா மனித உரிமை பேரவை நடவடிக்கைகளில் இருந்து தாங்கள் வெளியேறுகின்றோம் இலங்கை பிரச்சனையில் சம்பந்தப்பட விரும்பவில்லை என்று பகிரங்கமாக அறிவித்திருந்தார்கள். இப்பொழுது அந்த அடிப்படையில்தான் ஒவ்வொன்றையும் நிராகரிக்கின்றனர். இவ்வாறு நிராகரித்து கொண்டிருந்தால் போல் இலங்கை தப்பி விட முடியாது.

ஆகவே நிலைமைகள் மோசமடைந்து செல்கின்றன ஆகவே இலங்கை பதில் கூற வேண்டிய நிலைமையை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கின்றது. ஆகவே வெகுவிரை

விலே அதை செய்வதற்கான அழுத்தங்களை நாங்களும், சர்வதேச சமூகமும் சேர்ந்து கொடுப்பதன் ஊடாக இவர்களுக்கு ஒரு தக்க பதிலடியை கொடுத்தால்தான் கட்டாயமாக காணாமல் ஆக்கப்பட்டோருக்கான பிரச்சினை உட்பட பல பிரச்சினைகளுக்கு விடை தெரியும்.

**இனப்பிரச்சினைக்கு உள்ளக பொறி முறையின் மூலமே தீர்வு காணப்பட வேண்டுமென வெளிவிவகார அமைச்சர் அலி சப்றி அழைப்பு விடுத்துள்ளார். இதில் தமிழர்களது தமிழ் தரப்பின் முடிவு எவ்வாறிருக்கும்?**

**பதில்-** இலங்கைக்குள்ளே உள்ளக ரீதியாக பிரச்சினைக்கு தீர்வு காண வேண்டுமென்றால் அது சர்வதேசத்தினுடைய மத்தியஸ்தத்தின் அடிப்படையில் நடைபெற முடியாது. அது இலங்கை அரசுடன் தான் நாங்கள் பேச வேண்டும் இப்பொழுது எங்களுடைய ஆட்கள் கட்சிகள் தலைவர்கள் கேட்பது போல சமஸ்டியைத்தான் உயர்ந்த பட்ச கோரிக்கை போல தூக்கிப் பிடித்துக் கொண்டிருக்கிறார்கள்.

ஒரு சில கட்சிகள் கூட்டு சமஸ்டி அதாவது சமஸ்டிக்கு மேலே சொல்லியிருந்தாலும் கூட கூட்டு சமஸ்டி என்பது இரண்டு நாடுகள் என்று வந்ததன் பின்னர் அது இரண்டும் இணைந்து ஒரு ஒன்றியமாக செயல்படுவது கூட்டு சமஸ்டி. அது ஓரளவு உச்சபச்சமானது அதைப் பற்றி அவர்கள் சிந்திக்க போவதில்லை. சமஷ்டியைப் பற்றித்தான் சிந்திப்பார்களானால் நம்பினார்களானார் அது உள்ளகத்திலே பேசி 2015 ஜனாதிபதி தேர்தலில் தமிழ் மக்களுடைய ஆதரவோடு ஜனாதிபதியாக பதில் பாதுகாப்பு அமைச்சராக இருந்த திரு. மைத்திரிபால சிறிசேனாவை கொண்டு வந்த பின்னரும் கூட கடைசியில் அந்த முயற்சியை திட்டமிட்டு அவர்கள் காலம் கடத்தி முறியடித்தார்கள். அவ்வாறு இலங்கை அரசாங்கத்தை நடத்துவதற்கு தமிழ் தேசிய கூட்டமைப்பு ஆதரவு மீளப் பெறப்பட்டால் ஆட்சி கலையும் என்று இருந்த பொழுது கூட சாதிக்க முடியாததை இனிமேல் அவ்வாறான ஒரு சந்தர்ப்பம் வரும் என்று கூற முடியாது. ஆகவே உள்நாட்டிலே ஒரு தீர்வை பெறுவதற்கான வாய்ப்பு இல்லாத ஒரு சூழ்நிலையிலே 13வது திருத்தம் என்று 13 பிளஸ் என்றவர்கள் 13 மைனசைப் பற்றிக் கூட பேசாமல் இருக்கின்ற சூழ்நிலையில் வெளியக நடவடிக்கைகள் மூலம் தான் நாங்கள் இந்த நடவடிக்கைகளை வெளிநாட்டு சர்வதேச மத்தியஸ்தத்தின் ஊடாக எங்களுடைய சுயநிர்ணய உரிமையை கூறுவதன் மூலம் சாத்தியப்படுத்த முடியும் என்பது தான் என்னுடைய ஆணித்தரமான கருத்தாகும்.

**அண்மைக்காலங்களில் தமிழ் நாட்டில் பல்வேறு தலைவர்களை சந்தித்துள்ளீர்கள் இலங்கை தமிழர் பிரச்சனை குறித்து தமிழ் நாட்டில் எவ்வாறான பார்வை இருக்கிறது?**

**பதில்-** தமிழ்நாட்டிலே பல்வேறு கட்சி தலைவர்களையும் பல்வேறு அமைப்புகளுடைய தலைவர்களையும் பிரதிநிதிகளை சந்தித்து, பேச்சுவார்த்தை நடத்தியதன் பின்னர் பெப்ரவரி மாதம்2ம் திகதி ஒரு மாநாடு நடைபெற்றது அதற்கான என்னுடைய உதவிகளையும், ஒத்துழைப்புகளையும் நான் முழுமையாக வழங்கி இருந்தேன். தமிழ் நாட்டு மக்களுடைய கூட்டுப் பிரகடனம் என்ற பிரகடனத்தை அவர்கள் வெளியிட்டு இருக்கிறார்கள்.

கட்சிகள், பொதுமக்கள் சார்பிலே தமிழ் மாணவர் கூட்டமைப்பு அதை ஒழுங்கு செய்திருந்தது. ஆகவே அது பழ நெடுமாறன் ஜயா தலைமையிலே இந்த கூட்டுப் பிரகடனம் இப்பொழுது அமெரிக்கா உட்பட பல்வேறு நாடுகளினுடைய பிரதிநிதிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டு இருக்கிறது. அந்த கூட்டு பிரகடனத்திலே ஒரு சுதந்திரத்திற்கான பொதுமக்கள் வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் என்பதும் 13வது தீர்வு ஒரு தீர்வு அல்ல என்ற போன்ற பல விடயங்கள் கூறப்பட்டு அந்த பிரகடனம் வெளியிடப்பட்டிருக்கிறது. அதன் பின்னர் கூட பல்வேறு நடவடிக்கைகளிலே தொடர்ச்சியாக நான் சந்திப்புகளை நடத்தி ஈழத் தமிழர் பிரச்சினையிலே எட்டு கோடி தமிழக மக்களுடைய ஆதரவையும் அதேபோல இந்தியா முழுவதும் இருக்கக்கூடிய 140 கோடி மக்களுடைய ஆதரவையும் பெறுவதற்கான முயற்சியில் கடந்த ஆறு மாதங்களில் சுமார் இரண்டு வாரங்களுக்கு மேலாக புதுடெல்லியில் தங்கி இருந்து அங்கு பலரையும் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியிருந்தேன்.

கடந்த மாவீரர் நாளை தொடர்ந்து புறப்பட்டு சென்று நான் இப்பொழுது 10 நாட்களுக்கு இடையில் ஒரு தடவை வந்து சென்றதை விட தொடர்ச்சியாக அங்கே என்னுடைய மருத்துவ தேவைகளுக்காகவும், இந்த சந்திப்புக்களுக்காகவும் காலத்தையும், நேரத்தையும் நான் செலவிட கூடியதாக இருந்தது. அந்த வகையிலே தான் இப்பொழுது அந்த நிலவரத்தின்படி இந்தியா முழுவதும் இருக்க கூடிய 140 கோடி மக்களுடைய ஆதரவையும் திரட்ட கூடிய வகையில் இந்த புதிய பாராளுமன்றத்திலும், தமிழ்நாடு சட்டமன்றத்திலும் தீர்மானங்கள் கொண்டு வருவதற்கான முன் முயற்சிகள் ஆரம்பக்கப்பட்டுள்ளன. இந்த முயற்சிகள் இன்னும் தீவிரபடுத்தப்பட்டு பலஸ்தீனத்திற்கான சுயநிர்ணய உரிமையை இந்தியா உட் பட ஆதரித்து ஐக்கிய நாடுகள் மனித உரி மைப் பேரவையில் தீர்மானம் கொண்டு வரப்பட்டது போன்ற ஒரு முயற்சிக்கு உந்து சக்தியாக இவ்வாறான நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும் என்ற நம்பிக்கை யோடு இருக்கிறேன். இதற்கு மேலதிகமாக இப்பொழுது முள்ளி வாய்க்கால் இனப் படுகொலை நினைவு நாளை பல்வேறு கட்சிகள் நடத்திய பொழுது கூட நான் கட்சி பேதங்கள் இல்லாமல் எல்லா நிகழ்ச்சிகளிலும் கலந்து கொண்டேன்.

விடுதலை சிறுத்தைகள் தங்களுடைய அலுவலகத்திலே 17ம் திகதி நடைபெற்ற நிகழ்ச்சியில் கலந்து கொண்டு உரையாற்றினேன். 18ஆம் திகதி நாம் தமிழர் கட்சியினுடைய அலுவலகத்தில் தலைவர் சீமான் அவர்களுடைய தலைமையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் நான் பங்குபற்றியிருந்தேன்.

மே 19ஆம் திகதி சென்னை பெசன்ட் நகர் கடற்கரையில் மே17 இயக்கத்தின் தலைவர் திருமுருகன் காந்தி தலைமையில் நடைபெற்ற தலைவர் வை.கோ போன்றவர்கள் கலந்து கொண்ட நிகழ்ச்சியில் நானும் கலந்து கொண்டு என்னுடைய பிரசன்னத்தை வெளிப்படுத்தியிருந்தேன். ஆகவே இவ்வாறு எங்கு எல்லாம் சாத்தியமான இடங்களோ அங்கெல்லாம் சென்று என்னுடைய ஆதரவை கட்சிபேதங்களை கடந்து எல்லோருடைய ஆதரவு எங்களுக்கு தேவை என்ற வகையிலே செயல்பட வேண்டும் என்ற கருத்தை அங்கே நான் நிலை நாட்டியிருந்தேன் அதை அவர்கள் பெரும்பாலான கட்சிகளில் ஏறக்குறைய எல்லாருமே அந்த நிலைப்பாட்டை வரவேற்கிறார்கள் தங்களுடைய ஆதரவை தெரிவித்துள்ளார்கள்.



**தமிழ் அரசியல்கட்சிகள் இன்னமும் ஒரு கோடடிற்குள் வரவில்லை .இந்த நிலையில் தமிழர்களுடைய அரசியல் தீர்வுக்கான சாத்தியம் இருக்கிறதா?**

**பதில்-** இதை எல்லோரும் ஒற்றுமையுடன் தான் செய்ய வேண்டும். இதுவே மிகவும் சிறப்பா னது. ஊர் கூடி தேர் இழுப்பது போல வரக் கூடியவர்கள் சேர்ந்து இந்த சர்வதேச சமூ கத்தினுடைய உதவியோடு நாங்கள் ஒரு தீர்வை நோக்கி பயணிப்போமாக இருந்தால் அரசியல் தீர்வு சாத்தியமானது.

## தேசியத் தலைவரை ஏற்று வெற்றி

உலகத் தமிழர்களின் இளைய தளபதி ஆக விளங்கும் விஜய் தனது கட்சி மாநாட்டுக்கு சீமானை அழைத்து இருப்பது என்பது இன்று பேசு பொருளாக மாறியுள்ளது.

அதற்கு பதிலளிக்கும் வகையில் நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமானும் பத்திரிக்கையாளர் சந்திப்பு ஒன்றில் விஜயின் மாநாட்டுக்கு நீங்கள் செல்வீர்களா என்று எழுப்பிய கேள்விக்கு கண்டிப்பாக செல்வேன் என்று சீமான் அவர்கள் பதில் அளித்து இருப்பது சிலரை ஆச்சரியத்திற்கு உள்ளாக்கினாலும், உலகத் தமிழர்கள் மத்தியில் பெரும் வரவேற்பை பெற்றுள்ளது.

குறிப்பாக சமூக வலைத்தளங்களில் தேசியத் தலைவர் மேதகு வேலுப்பிள்ளை பிரபாகரன், நாம் தமிழர் கட்சி தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான், தமிழக வெற்றிக் கழகத்தின் தலைவர் இளைய தளபதி விஜய் மூவரும் ஒன்றிணைந்த படங்களை பலரும் வெளியிட்டு வருகின்றனர்.

இந்த வகையில் தேசியத் தலைவரை பின்பற்றும் சீமானும், ஈழத்து மருமகனான இளைய தளபதி விஜயும், தேசியத் தலைவரின் பெயரால் ஒன்றிணைந்து உலகத் தமிழர்களுக்கான அரசியலை முன்னெடுப்பார்கள் என்று பலரும் எதிர்பார்க்கின்றனர்.

இந்த விடயத்தில் சீமான் அவர்களும், விஜய் அவர்களும் தமிழக வெற்றி கழகத்தின் மாநாட்டுக்கு முன் சந்தித்து பல முக்கிய விஷயங்கள் தொடர்பில் கலந்துரையாடுவார்கள் என எமது தமிழக நிருபர் தெரிவிக்கின்றார்.

## வடக்கில் முகாமிட்டுச் சென்ற

ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரும் ஜனாதிபதி வேட்பாளருமான சஜித், மக்கள் விடுதலை முன்னணியின் தலைவரும் ஜனாதிபதி வேட்பாளருமான அநுர இருவரும் சென்ற கிழமை கடந்த வடக்குக்குப் பயணம் மேற்கொண்டிருந்தனர். அவர்கள் தற்போது கொழும்புக்குத் திரும்பியுள்ள போதிலும் கட்சிகளின் இரண்டாம் நிலை பிரதானிகள் தொடர்ந்தும் வடக்கில் முகாமிட்டு பல தரப்பினரையும் சந்தித்துக் கலந்துரையாடி வருகின்றனர்.

இதேவேளை, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அண்மையில் யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களுக்கு வந்து சென்றிருந்த நிலையில், கடந்த ஞாயிற்றுக்கிழமை அவர் மன்னாருக்குப் பயணம் மேற்கொண்டிருந்தார். என்பதும் குறிப்பிடத்தக்கது.

அத்துடன் நாமல் ராஜபக்சவும் விரைவில் யாழ்ப்பாணம் வரவுள்ளார் என்றும் தெரிய வருகின்றது. ஜனாதிபதித் தேர்தல் நெருங்கும் நிலையில் தமிழர்களின் வாக்குகளை இலக்கு வைத்தே சிங்கள பேரினவாதக் கட்சிகள் வடக்குக்கு படையெடுப்பது குறிப்பிடத்தக்கது.

## தமிழ்ப் பொதுவேட்பாளராக

இன அழிப்புக்கான சர்வதேச நீதிக்காக அஞ்சாநெஞ்சத் துணிவும். தகைமையும், வன்மையும் பொருந்திய ஒருவராக பொது வேட்பாளராகப் போட்டியிடுவதற்குத் தயார் என்று ஈழத்தமிழர் சுயாட்சிக் கழகத்தின் செயலாளர் நாயகம் அனந்தி சசிதரன் தெரிவித்துள்ளார். இலங்கைத் தீவில் ஈழத்தமிழர் தேசத்தின் பாரம்பரிய வரலாற்றுத் தாயகம் ஆக்கிரமிக்கப்பட்ட நிலையில் உள்ளது. எழுபத்தைந்து வருடங்க ளுக்கு மேலாக சிங்கள தேசம் ஒருதலைப்பட்சமாகத் தீர்மானித்து வந்துள்ள இலங்கை ஒற்றையாட்சி அரசு ஈழத்தமிழர் தேசத்தையும் அதன் தாயகத்தையும் ஆக்கிரமித்துள்ளது.

ஈழத்தமிழர்களின் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள தாயகத்தின் பிரதேச வாரியான பிரதிநிதித்துவம் தவறாகப் பயன்படுத்தப்பட்டு எமது தேசிய இனத்தின் அரசியல் வேணவா மறுதலிக்கப்படுவதற்கும் மலினப்படுத் தப்படுவதற்கும் இந்தத் தேர்தல் அரசியல், ஓர் அரசியல் வெளியாகப் பயன்படுத்தப்படக்கூடாது. எமது மக்களில் ஜனநாயக ஆணை இல்லாதோர் எமது பிரதி நிதிகள் போல வலம்வந்து எமது தேசிய வேணவாவைத் திரிபுபடுத்தாமல் இருப்பதற் காகவும் எமது பிரதேச ரீதியான தேர்தல் அரசியலை நாம் ஓர் தடுப்பு உத்தியாகப் பயன்படுத்துகிறோமே அல்லாது, தேர்தல் அரசியலை மூலோபாய வழிவகையாக ஈழத்தமிழர்கள் பயன்படுத்தவில்லை.

இந்தத் தேர்தல்களில் நாம் போட்டியிடுவதன் மூலம் இலங்கையின் ஒற்றையாட்சி முறையை நாம் அரசியல் தீர்வாக ஏற்றுக் கொள்வதாக எவரும் ஒருபோதும் பொருள் கோடல் செய்ய இயலாது.

ஈழத்தமிழர்களைப் பொறுத்தவரை தேர்தல் அரசியல் என்பது இலங்கைத் தீவில் ஒரு மூலோபாய வழியாக அமையும் தகுதியை எப்போதோ இழந்துவிட்டது. அதை எந்த அளவில் உத்தியாகப் பயன்படுத்துவது என்பதில் மட்டுமே நாம் கண்ணும் கருத்துமாக இருக்க வேண்டும் - என்றார்.


# அரவிந்தனை விடுதலை செய்யக்கோரி யாழில் சுவரொட்டிகள்.

பயங்கரவாத தடுப்புப் பிரிவினரால் விசாரணை என்ற பெயரில் நீண்ட காலமாக தடுத்து வைத்துள்ள அரவிந்தனையும் ஏனைய அரசியல் கைதிகளையும் விடுதலை செய்யக்கோரி யாழ்ப்பாண நகர் எங்கும் போராளிகள் நலன்புரிச்சங்கத்தினரால் பரவலாக சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன.






# தமிழரின் இருண்ட காலத்தை பேசும் ஊழி




**க.அலெக்ஸன்**
யாழ். பல்கலைக்கழகம்.

"ஈழ நிலத்திலும் உலகத் தரமாக பேசும் கதைகள் உள்ளன என்பதற்கும், இனத்தின் விடுதலைக்கும், உரிமைக்கும், சினிமா என்ற ஆயுதத்தை கையில் ஏந்தலாம் என்பதற்கும் சாட்சியாக அமைந்துள்ளது ஊழி திரைப்படம்.

2009ஆம் ஆண்டுக்குப் பின்னரான காலத்தில் ஈழத்தமிழ்மக்கள் எதிர்கொள்ளும் இருண்ட காலத்தை பேசுகின்ற திரைப்படமாக இயக்குனர் ரஞ்சித் ஜோசப்பின் ஊழி திரைப்படம் வெளியாகியுள்ளது.

2009 இல் போர் முடிவுக்கு கொண்டு வரப்பட்ட சூழலில் இரண்டு நாடுகள் ஒன்றாக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்ட தருணத்தை அறிவிக்கும் நாசரின் கம்பீரக்குரலுடன் படம் தொடங்குகிறது. அதற்குப் பிறகும் தமிழர்கள் மீது நீளும் போரை ஊழி திரைப்படம் தத்துரூபமாகப் பதிவு செய்துள்ளது.

2009 ஈழப்போரின் வீழ்ச்சியை படத்தின் ஆரம்பத்தில் வரும் இராவணன் கூத்து வெளிப்படுத்தி நிற்கிறது போரின் வெற்றியுடன் வெருகல் என்ற கிழக்கின் எல்லைக்கிராமத்தில் தமிழர்களின் நிலங்களை ஆக்கிரமிக்கத் தொடங்குகின்றனர் சிங்களவர்கள். இதனை தட்டிக் கேட்கும் பரமதேவா காணாமல் ஆக்கப்படுகிறார். அவரின் மகனாக சுமார் 13 வயது மதிக்கத்தக்க காசிநாதனின் வாழ்வு காணாமல் ஆக்கப்படுதலுடன் சிதையத் தொடங்குகிறது.



தமிழர் தேசத்தில் உயர்ந்த நிலையில் உள்ள கல்வி எவ்வாறு திட்டமிட்டு சிதைக்கப்படுகிறது என்பதையும் திறந்து விடப்பட்ட போதையின் பாவனை எவ்வாறு ஒரு இளைஞனின் வாழ்வை பலிகொள்ளுகிறது என்பதனையும் காணாமல் ஆக்கப்படுதல் எவ்வாறு அவர்தம் குடம்பத்தை சிதைத்துச் செல்கிறது என்பதையும் ஊழி கதைக்களமாக கொண்டுள்ளது. அத்துடன் தமிழர் நிலத்தில் எப்படி எல்லாம் ஊழியின் கொடும் கரங்கள் ஆக்கிரமிப்பை அழிவை மேற்கொள்ளுகிறது என்பதையும் படம் விரிவாகப் பேசுகிறது.

சினம் கொள் திரைப்படத்தை இயக்கிய ரஞ்சித் ஜோசப் இந்தத் திரைப்படத்தை இயக்கியுள்ளார். ஈழக் கதையை உலகத் தரமாக சொல்லும் திரைக் கதையின் உத்தி இந்தப்படத்தின் பெரும்பலம். ஒரு கதாபாத்திரத்தின் வாழ்வின் சித்திரத்தை நான்கு வேறுபட்ட பருவங்களில் இருந்து கதை சொல்வதும் நான்கு மாறுபட்ட நிலங்களில் இருந்து கதைசொல்வதும் ஊழி திரைப்படத்தின் புதிய உத்தியமாக தரம் பெறுகிறது.

திரைப்படத்தின் மண்ணினதும் காலத்தினதும் துயரமும் நெருக்கடியும் மாறாத வசனங்களையும் செமையான பாடல்களையும் ஈழத்து கவிஞர் தீபச்செல்வன்



எழுதியுள்ளார். படத்தின் பாடல்கள் இந்திய படப் பாடல்களை விஞ்சி காதலின் சுவையை ஊட்டுகிறது. படத்தில் இந்திய ஒளிப்பதிவாளர் ராஜேஸ் வர்மாவின் கமரா ஈழ மண்ணின் இரு ளையும் ஒளியையும் நிலத்தையும் திரையில் அழகாக காட்டியுள்ளது. அத்துடன் படத்தின் பின்னணி இசையாலும் பாடல்களின் இசையாலும் படத்திற்கு அழகையும் விறு விறுப்பையும் கூட்டியுள்ளார் இந்திய இசையமைப்பாளர் என்.ஆர்.ரகுநந்தன்.


திரைப்படத்தில் நாயகனாக ஆகாஷ் தியா கலிங்கமும் நாயகியாக விபூர்சனாவும் (யாழ் பல்கலைக்கழக ஊடகத்துறை மாணவி) மிக நேர்த்தியாக நடித்துள்ளனர். அத்துடன் சட்டத்தரணி சுகாஷ் இப்படத்தில் முக்கிய பாத்திரத்தில் நடித்துள்ளார். ஈழத்தின் நடிகர் ஜோன் அன்ரன் மற்றும் வனிதா, ஜெசி, அகிலன். ஜீவா (ஊடகவியலாளர்) கவிஞர் தீபச்செல்வன், சதுர்ஜன், வஜிவரன். ஆசிரியர் சத்தியானந்தன் உள்ளிட்ட பலரும் படத்தில் இயல்பான நடிப்பின் ஊடாக கவனத்தை ஈர்த்துள்ளனர்.

ஈழநிலத்திலும் உலகத் தரமாக பேசும் கதைகள் உள்ளன என்பதற்கும் இனத்தின் விடுதலைக்கும், உரிமைக்கும், சினிமா என்ற ஆயுதத்தை கையில் ஏந்தலாம் என்பதற்கும் சாட்சியாக அமைந்துள்ள ஊழி திரைப்படம், ஈழ சினிமாவின் மைக்கல்.

ஊழி – இருண்ட காலத்தின் சில கசப்பான பக்கங்கள்.

# விடுதலைப் புலிகளை 'பயங்கரவாதி' நாவல் மீளுருவாக்குகிறதா

## எழுத்தாளர் தீபச்செல்வனிடம் ரி.ஐ.டி தீவிர விசாரணை




ஈழத்து எழுத்தாளர் தீபச்செல்வன் எழுதிய "பயங்கரவாதி" நாவல், விடுதலைப் புலிகளை மீளுருவாக்கம் செய்யும் நோக்கில் எழுதப்பட்டதா என்பதை ஆராயும் நோக்கில் பயங்கரவாத தடுப்புப் பிரிவு தீவிர விசாரணையை முன்னெடுத்துள்ளது.

கிளிநொச்சி பரந்தனில் உள்ள பயங்கரவாத தடுப்புப் பிரிவில் தீபச்செல்வனிடம் இரண்டு மணி நேர விசாரணை இடம்பெற்றது. தீபச்செல்வன் எழுதியுள்ள பயங்கரவாதி நாவல் தொடர்பில் பல கேள்விகளை இதன்போது பயங்கரவாத தடுப்புப் பிரிவு எழுப்பியுள்ளது.

நாவலில் இடம்பெறும் மாறன் என்ற கதாபாத்திரம் யார்? இப்போது எங்கே உள்ளார்? என்றும் நாவலில் இடம்பெறும் இராணுவக் கதாபாத்திரங்கள் யாரைக் குறித்துள்ளன என்றும் கேட்கப்பட்டதாக தீபச்செல்வன் தெரிவித்தார். அனைத்து கதாபாத்திரங்களும் கற்பனையானவை என்று தாம் பதில் அளித்துள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை இந்த நாவலில் விடுதலைப் புலிகளை மீளுருவாக்கம் செய்யும் கருத்துக்கள் உள்ளனவா என்றும் விசாரணை செய்யப்பட்டது. அப்படியான கருத்துகள் நாவலில் இல்லை என்றும் கடந்த காலத்தில் நடந்த விடயங்களையே நாவல் பேசுவதாகவும் தீபச்செல்வன் பதில் அளித்துள்ளார்.

போரில் தாய். தந்தையரை இழந்த ஒரு குழந்தை அதிலிருந்து தப்பி கல்வி கற்று பல்கலைக்கழகம் செல்வதையும் அங்கு மாணவத் தலைவராகும் அந்த இளைஞன் பின்னர் போரால் கொல்லப்படுவதையும் தனது நாவல் பேசுவதாக தீபச்செல்வன் விளக்கமளித்துள்ளார்.

யாழ் பல்கலைக்கழகத்தில் சில மாணவத் தலைவர்களும் மாணவர்களும் கொல்லப்பட்ட நிலையில் அந்தப் பின்னணியை வைத்து மாறன் என்ற கதாபாத்திரம் உருவாக்கப்பட்டதாகவும் தீபச்செல்வன் குறிப்பிட்டார்.

பிழையான இராணுவத்தினர் மத்தியில் உள்ள நல்ல இராணுவ அதிகாரிகளையும் விடுதலைப் புலிகளால் காப்பாற்றப்பட்ட இராணுவ சிப்பாய்களையும் பற்றி பயங்கரவாதி நாவல் பேசுவதாகவும் இதனை சிங்கள மக்கள் வாசித்தால் தமிழர்களை புரிந்து கொள்ள வழி வகுக்குமே தவிர, இன வேறுபாட்டை ஒருபோதும் ஏற்படுத்தாது என்றும் குறிப்பிட்டுள்ளார்.

எந்த சூழ்நிலையிலும் கல்வியை கைவிடாத மாறன் என்ற கதாபாத்திரம் வழியாக இந்த நாவல் கல்வியை பேசகிறது என்றும் இனி வரும் காலத்தில் போரும் மரணங்களும் அழிவுகளும் இடம்பெறக் கூடாது என்பதை வலியுறுத்தவே இந்த நாவலை தாம் எழுதியுள்ளதாகவும் தீபச்செல்வன் தெளிவுபடுத்தினார்.

**அன்பான வாசகர்களுக்கு..!**

உலகத் தமிழர்களின் கைகளில்
தவழும் மின்னிதழ் மற்றும்
அச்சு வடிவிலும் தினசரி மற்றும்
வார வெளியீடாக வெளிவரும்
தேசியம் பத்திரிகைக்கு
தமிழ்த் தேசியத்திற்கு
வலுச்சேர்க்கும் ஆக்கபூர்வமான
கட்டுரைகள், கவிதைகள்,
உண்மைச் சம்பவங்கள், செய்திகள்
போன்றவற்றை எமக்கு அனுப்பி
தேசியம் பத்திரிகையை
வலுவடையச் செய்யுங்கள்.

No. 27, Kannathiddy Road, Jaffna.
Tel : 021 222 7557
E-mail : thesiyamnews@gmail.com
Whatsapp : +94 76 567 3339

**தேசியம் பத்திரிகையின் மின்னிதழை பெற இவ் வாட்ஸ் ஆஃப் குழுவில் இணைந்து கொள்ளுங்கள்..!**

SCAN ME












இப்பத்திரிகை 20.06.2024 அன்று அகரவ் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால், யாழ்ப்பாணம், கண்ணாதிட்டி வீதியில் 27ஆம் இலக்கத்திலுள்ள பணிமனையில் தயாரிக்கப்பட்டு, அச்சிட்டு வெளியிடப்படுகிறது.